செங்கோல்
ஆசிரியர்: ம.பொ.சிவஞானம்

மலர் 12] சென்னை, திருவள்ளுவர் ஆண்டு 1993, தை 29 (11-2-62) ஞாயிறு, 20 பைசா [இதழ் 11

ராஜ்ய கீதம், தேசீயத்திற்கு விரோதமா?

'தமிழன்'

தமிழரசுக் கழக நான்காவது மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைப்படிப்போர், ஒவ்வொரு தீர்மானமும் தமிழினத்தின் உரிமை உணர்ச்சியைப் பிரதிபலிப்பதைக் காண்பார்கள். அதனால், உரிமை உணர்ச்சி என்ற பெயரால் கட்சி வளர்க்கும் தந்திரத்தையோ, பதவி பிடிக்கும் உபாயத்தையோ நமது மாநில மாநாடு கடைப்பிடிக்கவில்லை. அப்படி யாரும் இது வரை சொல்லவும் இல்லை.

இது நிற்க, தேர்தல் புழுதி கிளப்பிவிடப்பட்டிருக்கும் இன்றைய சூழ்நிலையில்கூட வேலூர் தீர்மானங்கள் பொறுப்புவாய்ந்த சில பத்திரிகைகளின் பார்வைக்குப் பட்டிருக்கிறது என்பதை நினைக்க நாம் மகிழ்ச்சி அடையலாம். 'ஜனகணமன அதிநாயக ஜெயகே' என்ற தேசியப்பாடல், கவி தாகூர் அவர்களால் முன்பு எப்போதோ, வேறு எதற்காகவோ பாடப்பட்டதாகும். அந்தப் பாடல் ஒன்று, இந்திய உபகண்டத்தின் உட்பகுதிநாடுகளை குறிக்காமலிருக்க வேண்டும். குறிப்பதானால், ஏதேனும் ஒரு நீதியை, நெறியைக் கடைப்பிடித்துக் குறிக்கவேண்டும். அப்படிக் குறிக்கும் ஒன்றுதான் தேசிய கீதமாக இருக்கத் தகுதி உண்டு.

ஆனால், தாகூரின் பாடல் சுதந்திர இந்தியாவின் தேசிய கீதமாக இருக்கவேண்டுமென்ற எண்ணத்தில் பாடப்பட்டதன்று. அதனால், இந்தியாவின் உட்பகுதி நாடுகள் மொழி அடிப்படையிலோ அல்லது ஆரிய-திராவிடக் கலாச்சார அடிப்படையிலோ, அப்படிக்குமின்றி ஆறு, மலை என்ற இயற்கை காரணங்களைக் கொண்டோ குறிப்பிடப் பெறவில்லை.

அதனால், இந்திய தேசியப் பாடலை இன்றுள்ள மொழிவாரி ராஜ்யங்களைக் குறிப்பிடும் வகையில் திருத்தி அமைக்கவேண்டுமென்று மாநில மாநாடு கோரியது.

இந்த கோரிக்கையை அதற்கு சான்றாகக் கூறப்பட்ட காரணங்களை அங்கீகரிப்பது போன்று 11-2-62 ஆனந்த விகடன் இதழில் ஜனகணமன பாடல் தோன்றிய காலத்தையும் காரணத்தையும் எடுத்துக்காட்டி, அது மாற்றப்படவேண்டியதே என்ற வாதம் வலியுறுத்தப் பட்டிருக்கிறது. இதனை மகிழ்ச்சியோடு வரவேற்கிறோம்.

மாநில மாநாடு, தமிழகத்திற்கென தனி ராஜ்ய கீதம் ஒன்று இருக்கவேண்டுமெனக் கோரியிருக்கின்றது. இந்தக் கோரிக்கையை சர்வோதய இயக்கத்தின் சார்பில் வெளிவரும் 'கிராம ராஜ்யம்' வார இதழில் கண்டித்திருக்கிறார், புனைப்பெயர் தாங்கிய கட்டுரையாளர் ஒருவர்.

இது போன்ற விஷயங்களில் விவாதம் வரவேற்கத்தக்கதே.

'கிராம ராஜ்யம்' நான் ஆர்வத்தோடு படித்து வரும் ஏடுகளில் ஒன்று. அதனால், புனைபெயரில் எழுதப்பட்டிருப்பினும், தமிழரசுக் கழகத்தாரின் மதிப்புக்கும் ஆதரவுக்குமுரிய ஒரு இயக்கத்தின் சார்பில் அந்தஏடு வெளிவருவதால், அதில் வெளிவந்துள்ள கண்டனத்திற்கு விடை யளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

'கிராம ராஜ்யம்' 9-2-62 இதழில் செய்திக் கண்ணோட்டம் என்ற பகுதியில் "தமிழரசுக் கழகமும் தேசிய கீதமும்" என்ற உபதலைப்பின்கீழ் காணப்படும் கருத்து வருமாறு:

"தமிழ் நாட்டில் மொழி "வெறி" இல்லாமல், இன "வெறி" இல்லாமல், தமிழ் மொழியிலும் தமிழ் நாட்டின் பேரிலும் அக்கறை கொண்ட ஒரு கட்சி தமிழரசுக் கழகம் என்பது என் கருத்து.

வேலூரில் நடைபெற்ற அதன் ஆண்டு மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களும் பேச்சுக்களும் இதற்குச் சான்று கூறுகின்றன. அவற்றுள் ஒன்று பின்வருமாறு:-

"தமிழரசுக் கழகம் ஐக்கிய இந்தியாவை ஆதரிக்கிறது. பிளவு மனப்பான்மையை எதிர்க்கிறது. தமிழ் தேசியக் கட்சி கோரும் மத்தியிலிருந்து பிரியும் உரிமை தற்கொலைக் கொப்பானதாகும், தேசமுன்னேற்றத்திற்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் அது முற்றுப் புள்ளி வைத்துவிடும்.

"இந்த சந்தர்ப்பத்தில் தேசிய கீதத்தைப் பற்றிய பிரச்னையை இங்கு விவாதிக்க விரும்புகிறேன். தமிழரசுக் கழகம் நிறைவேற்றிய தீர்மானங்களில் ஒன்று "வாழிய செந்தமிழ்" என்ற கீதத்தை ராஜ்ய கீதமாகக் கொள்ளுமாறு வேண்டுகிறது. தமிழ் பேரிலும் தமிழ் நாட்டின் பேரிலும் பற்றுதலால் இவ்வாறு தீர்மானம் கூறலாம். ஆனால் இதைச் சற்று ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

"தேசிய கீதமும் தேசியக் கொடியும் ஒன்றையொன்று இணைந்தவை. இவற்றுள் எதுவும் தேசத்திற்கு ஒன்றும் ராஜ்யத்திற்கு இன்னொன்றும் இருக்க முடியாது. "வாழிய செந்தமிழ்" என்ற பாடல் எல்லாப் பள்ளிகளிலும் எல்லாத் தமிழரும் பாடவேண்டிய பாடலே. இது 'தமிழ் நாடும் பாரதநாடும் ஒருங்கே வாழிய' என்று வாழ்த்துகின்றது. ஆயினும் அதற்கு ராஜ்ய கீதம் என்று ஒரு தனி அந்தஸ்தைப்

[11-ம் பக்கம் பார்க்க]

வேலூர் இலக்கிய மாநாட்டு காட்சிகள்

(1) வேலூர் மாநாட்டில், சின்னக் கலைவாணர் குலதெய்வம் இராசகோபால் பேசுகிறார். (2) சட்டாம் பிள்ளை வெங்கடராமன் பேசுகிறார். (3) மேடையில் தலைவர்கள் வீற்றிருக்கும் காட்சி. (4) மேலே காண்பது மாநாட்டில் திரண்டிருந்த மக்கள் கூட்டத்தில் ஒரு பகுதி.

அகில இந்தியக் கட்சிகள் சுயாட்சிக்குப் பாடுபடவேண்டும்

—o—

பின்னணி வேறுபடுவதால், ஒன்றுபோல பேச முடியாது

—•—

திரு. ஈ. வெ. கி. சம்பத் பேச்சு

19-1-62ல் வேலூரில் நடைபெற்ற சுயாட்சி மாநாட்டில் திரு. சம்பத் பேசியதன் தொடர்ச்சி வருமாறு:

இன்றைய தினம் நான் உள்ளபடியே கருதுகிறேன், பிரிவினைவாதிகளைப் பற்றி அதிகம் சத்தம் போடுகிறவர்கள்தான், அவர்களுக்கு ஆக்கம் தருகிறார்கள் தங்களுடைய நடவடிக்கையாலே என்று நான் உறுதியாகச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். இன்றைய தினம் உள்ளபடி இந்தியாவினுடைய பிரதேச ஒற்றுமை, இந்தியாவினுடைய அரசியல் ஒற்றுமை பாதுகாக்கப்படவேண்டுமென்று வெளியிலே எடுத்துச்சொல்லிக் கொண்டிருக்கின்ற குரல்களுக்கு, உள்ளபடியே உணர்ச்சு சொல்லுகின்ற குரல்களுக்கு, இன்றைய இந்திய அரசியலிலே கிடைக்க வேண்டிய வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை.

அதிகாரத்திலே இருந்து கொண்டு ஆர்ப்பரிக்கின்றவர்கள் செய்கின்ற காரியம் ஒவ்வொன்றும்தான், பிரிவினைச் சக்திகளுக்கு-வேறு எந்த விஷயத்திலே, எவ்வளவு திறமைக் குறைவாகவும், அரசியல் சூன்யமாகவும் இருந்தாலும் தனியாகக் கொடுத்துக் கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம்.

ஆக, அவர்களுக்கு உரம் தந்து கொண்டிருப்பது இவர்களுடைய உணராத தன்மை தான் என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்.

ஆக, என்னுடைய அருமை நண்பர்களே! நான் இந்த மாநாட்டின் மூலம் என்ன விஷயத்தை வலியுறுத்த விரும்புகிறேனென்றால், எனக்கு முன்பு பேசிய நண்பர்கள் குறிப்பிட்டதுபோல, சின்ன சின்ன பிரச்சனைகளிலே வேறுபாடுகள் இருக்கக் கூடும். ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமான அரசியல் பின்னணியிலே நாம் வந்திருக்கிறோம். ஆக, எல்லோருமே ஓர் உருவமாக, ஒரே மாதிரி முகமும் முழியும் ஒரே மாதிரி இருக்க முடியாது. ஒவ்வொருவரும் வளர்ந்து வந்திருக்கின்ற பின்னணி வேறு; இங்கு வீற்றிருக்கின்ற பெருந் தலைவர் ம. பொ. சி. அவர்களின் பின்னணி வேறு. இங்கே அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல் அவர்கள் காந்தியடிகள் சொன்ன பல உபதேசங்களிலே இந்த உபதேசத்திற்கு ஒரு கோடிட்டுக் காட்டி, ஒரு ஒளியூட்டிக் காட்டி அதனை முன்வைத்து பிரச்னைகளை அணுகி இன்றைய தினம் இந்தமேடையிலே அமர்ந்திருக்கிறார்.

அதே போல், என்னைப் பொறுத்த வரையில் என்னுடைய பின்னணி, எப்படி எப்படியோ பயங்கரமாக இருந்து நான் எப்படியோ இங்கே வந்து நின்று கொண்டிருக்கின்றேன்.

ஆக, ஒவ்வொருவருடைய அரசியல் பாரம்பரியம், பின்னணி, அதிலே இருந்துவரும் போது, எல்லோரும் விளிம்பிலே அங்குலக் கணக்கிலே இருக்க முடியுமென்று எதிர்பார்த்து, அதுவரை தமிழகம் தாங்கிக் கிடக்கலாமென்று இராதீர்கள். எங்களுக்குள்ளே வேறுபாடுகளைப்பற்றி சில நேரங்களிலே அதிகமாகப் பேசிக் கொண்டாலும், நீங்கள்தான் எங்கள் இரண்டு பேருக்கு முன்னே வேறுபாடில்லை, கிட்டத் தட்ட ஒரே உயரந்தான். ஒரே நிறந்தான் என்று நீங்கள் எங்களைச் சமாதானப் படுத்த வேண்டும்.

தமிழகத்து மக்களுக்கு அதனாலே லாபமுண்டு என்று நான் கருதுகின்றேன். இந்த நேரத்தில் நான் இதனை எடுத்துச் சொல்ல வேண்டுமென்றிருந்ததை எனக்கு முன் பேசிய நண்பர்கள் எடுத்துரைத்தார்கள். அதே நேரத்தில் நான் மெத்தவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

அகில இந்தியக் கட்சியிலே பணியாற்றுகின்ற சில நல்ல முக்கிய நண்பர்கள், தங்களுடைய தொண்டாலும் தியாகத்தாலும் அனுபவத்தாலும் எல்லோருடைய உள்ளங்களிலும் இடம் பெற்றிருக்கின்ற அருமையான நண்பர்கள் இங்கே வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு நான் என்ன சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன் என்றால், மாநில சுயாட்சிக்கு எந்த ஒரு முற்போக்குக் கட்சியும் எதிரியல்ல என்று தனித்த உரையாடலிலே நமக்கு விளங்கினாலும், என்ன காரணத்தினாலோ அகில இந்தியக் கட்சிகள் என்பவை இந்த இயற்கையான உணர்ச்சிக்குப் பகையான கட்சி என்ற தப்பெண்ணம் நிலவிக்கொண்டிருக்கின்றது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் அந்த எண்ணத்தை மாற்றுவதற்கு, மற்ற பிரச்னைகளிலே நாம் கொடுக்கின்ற குரலைவிட, கொஞ்ச காலத்திற்கு அதிகமான அளவிற்கு இந்தப்பிரச்னையிலே குரல் கொடுத்து, அகில இந்தியக் கட்சி என்பது எந்த ஒரு மொழி வழி தேசிய உணர்ச்சிக்கும் முரணானது அல்ல, அதற்கும் வழி வகுக்கக் கூடிய நல்லெண்ணம் படைத்ததுதான் என்பதை எடுத்துக் காட்டிக் கொள்வதற்கு நாம் நிச்சயம் முயலுதல் வேண்டும்.

விபரமறிந்தவர்களிடையே வேறுபாடுகள் இருக்க நியாயமில்லை. ஆனால் என்ன காரணத்தினாலோ மக்கள் மத்தியிலே அப்படி ஒரு எண்ணம் இருக்கின்றது. அதைத் தப்பான எண்ணம் என்று சொல்லக் கூட நான் சித்தமாக இருக்கின்றேன். ஆனால் அந்த எண்ணத்தைப் போக்குவதற்கு மற்றவர்கள் முன்வருவதைவிட, அந்தக் கட்சிகளிலே பணியாற்றுகின்ற நண்பர்கள் முன்வருதல் வேண்டுமென்று உங்கள் சார்பாக நான் அவர்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

அடுத்தாற் போல் மற்றொன்று சொல்வேன். வேறு என்றும் இருந்ததைவிட, இன்றையதினம் உலகத்திலே ஏற்பட்டிருக்கின்ற புதிய மாற்றம் என்னவென்றால், நீண்டநெடுங் காலமாக பண்டைப் பெருமைகளோடு, தனிநாடுகளாக இருந்து பெருமையும், சிறப்பும் படைத்த நாடுகள்கூட இன்னும் உலகத்திலே பெரிய வல்லரசுகளை அமைத்துக் கொண்ட வல்லரசுகளாகத் திகழ்ந்த நாடுகள் கூட, இன்றையதினம் தனித்து இருப்பதைவிட, நான்கைந்து நாடுகள் சேர்ந்து சில காரியங்களுக்கு ஒன்றுவது உகந்தது என்பதை உணர்ந்திருக்கிறார்கள்.

இரண்டாவது உலகப் போருக்குப் பின்னும், அணுகுண்டு கண்டுபிடிக்கப் பட்டதற்குப் பின்னும், இன்னும் நான் சொல்வேன், மனிதன் விண்வெளிக்குச் சென்று வருகின்ற இந்த நிலை ஏற்பட்டதற்கு அடுத்தாற் போலும் இந்த எண்ணம் வலுப்பட்டுக் கொண்டு வருகிறது. இங்கிலாந்தும் பிரான்சும் சாதாரணமானநாடுகளல்ல. இதுசரித்திரம் படித்த நண்பர்களுக்குத் தெரியும். பரப்பளவிலே சின்ன நாடுகளாக இருந்தாலும், மக்கள் தொகையிலே சின்ன நாடுகளாகவே விளங்கினாலும், அந்த நாடுகளுடைய சரித்திரப் பெருமை மிகப்பெரியது என்பதை வரலாறு கற்ற ஒவ்வொருவரும் உணர்வார்கள்.

அப்படிப்பட்ட நாடுகள், இன்று வேறு சில நாலு நாடுகளோடு சேர்ந்து ஐரோப்பியப் பொதுச் சந்தையை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. அதிலே இருக்கின்ற பொருளாதாரக் கருத்து வேறுபாடுகள் அது ஒரு மனப்போக்கு. ஆறு பேர் சேரலாம் என்று வருகிறது. யாருக்கு வருகிறதென்றால், தனித்தனி நேஷன் ஸ்டேட் என்பது மட்டுமல்ல, நீண்ட நெடுங் காலமாக வெறும் பெருமைக்குரிய வல்லரசாக, அளவிலேயும், செல்வத்திலேயும் சின்னவர்களாக இருந்தாலும், அனுபவத்திலேயும், ராச தந்திரத்திலேயும் ஏனைய பெரிய வல்லரசுகளுக்கெல்லாம் வழிகாட்டிய ஐரோப்பிய நாட்டாண்மையை வகித்துக்கொண்டிருந்த அந்த நாடுகள், இன்று நாலு நாடுகளோடு சேர்ந்து ஒரு அமைப்பைக் காண வேண்டுமென்று எண்ணிக்கொண்டிருக்கின்றன.

'ஐரோப்பியப் பொதுச்சந்தை'யைக் காணுகின்ற அதே நேரத்தில், இந்த மாநாட்டிலே பிரதிநிதிகள் பேசுகின்றார்கள். என்ன பேசுகிறார்கள் என்றால், இன்றைய தினம் பொருளாதாரத் துறையிலே நாம் ஆறு பேரும் சேர்ந்திருக்கின்றோம். வெகு விரைவில் நம் ஆறு பேருக்கு மிடையிலே ஒரு பொது ராணுவம், பொது வெளி பொருளாதாரக் கொள்கை, பொது வெளி உறவு என்று இப்படி நம்முடைய கூட்டு பலப்படவேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

ஆக, இந்த மனப்போக்குகளை நாம் நமது மக்களின் மத்தியிலே-சிறிது சிரமமாக இருந்தாலும்-எடுத்து விளக்கித்தான் தீர வேண்டும். நம்முடைய நாட்டிலே இருக்கின்ற மக்களுக்கு இரண்டில் ஒன்றுதான் புரியும் என்ற நிலை இருக்கத்தான் செய்யும் இன்னும் கொஞ்சகாலத்துக்கு, ஒன்று வெட்டிக்கொண்டே விடுவது. ஒன்று அவன் காலிலே சரணடைந்து விடுவது. இந்த இரண்டுக்கும் நடுவில் ஒரு நிலையைச் சொல்லுவது சிரமம். அதனைப் புரிந்து கொள்வது சற்று சிரமம். ஆனால் அதைக் கண்டு அஞ்சியோ நாம் நமக்குத் தோத்த விபரத்தை நாட்டுமக்கள் முன் வைக்காமலே இருந்துவிடக் கூடாது.

(தொடரும்)

காந்தியமே, ஏழைக்குக் கதி மோட்சம்!

—•—

உழைத்துப் பிழைப்பதே, நாகரிகம்!

—•—

ம. பொ. சி.யின் காந்தியப் பேச்சு

5-2-62 காலை சென்னை மாநிலக் கல்லூரியில் காந்தியப் பொருளாதாரக் கண்காட்சியைத் துவக்கி வைத்து ம. பொ. சி. பேசியதாவது:

'காந்தியப் பொருளாதாரம்' என்பது பற்றிப் பேசப் புகும் போது அதிலுள்ள ஒரு குறை எனக்குத் தெளிவாகப் படுகிறது. அதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதாவது, காந்தியப் பொருளாதார மென்பது, திட்ட வட்டமாக, பல்வேறு கோணங்களிலிருந்தும் பார்த்து முழு வடிவம் கொடுக்கப்பட்ட ஒரு தத்துவமாக இன்று நம்மிடையே இல்லை. காந்தியடிகள் கருத்தில் அப்படி ஒரு முழு வடிவம் இருந்திருக்கலாம். ஆனால், அதனைத் தம்உள்ளத்தில் உள்ளபடியே உலகத்தாருக்கு அறிவிக்க அவருக்கு வாய்ப்பிருக்க வில்லை. அவருடைய காலமெலாம் அரசியல் சுதந்திரத்துக்குப் போராடுவதிலேயே கழிந்து விட்டது. அரசியல் சுதந்திரம் பெற்றதை அடுத்து அடிகளாரின் காலமும் முடிந்துவிட்டது.

விடுதலைக்குப் பின்னர் நெடுங்காலம் அவர் வாழ்ந்திருப்பின் பொருளாதாரச் சுதந்திரத்தைப் பற்றிப்பேசியும் எழுதியும் நமக்கு விளக்கம் தந்திருப்பார். ஏன்? பொருளாதாரச் சுதந்திரம் பெறுவதற்கான கிளர்ச்சியைத் துவங்கி அதிலே நாம் எல்லோரும் ஈடுபடுமாறும் செய்திருப்பார். ஆனால், அவருக்கு அந்த வாய்ப்புக் கிடைக்கவில்லை.

பாரத மக்களின் அரசியல் சுதந்திரக் கிளர்ச்சி முற்றிலும் அன்னியருடைய ஆதிக்கத்திற்கு எதிராக நடந்த ஒரு தேசியப் புரட்சி. பொருளாதார சுதந்திரக் கிளர்ச்சி அத்தகையதன்று. அது உள்நாட்டுப் பிரச்னை. ஆகவே, அன்னியருக்கு எதிராக நடைபெற்ற தேசியப் போராட்டத்தின் மத்தியிலே விவாதத்திற்கிடமளிக்கும் பிரச்னையான பொருளாதாரக் கிளர்ச்சியை நடத்தியிருப்பின், விடுதலைப் போராட்ட அணியில் பிளவு ஏற்பட்டிருக்கும். அதனால் பாரதம் அரசியல் சுதந்திரம் பெறும் வரை பொருளாதாரச் சுதந்திரத்திற்கான பிரச்சாரத்திலோ, நேரடி நடவடிக்கையிலோ ஈடுபடக் காந்தியடிகள் விரும்பவில்லை.

அத்தகைய செயலில் பண்டித நேரு ஈடுபட்டபோதும் அடிகள் அதனை மனமுவந்து வரவேற்கவில்லை. ஆனால், விடுதலைப் போராட்டத்தின் மத்தியிலேயும் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் சுதந்திர பாரதத்தின் பொருளாதார அமைப்பு எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றி, அடிகளார் தெரிவித்த கருத்துக்கள் இல்லாமற் போகவில்லை. அவருடைய இலக்கியங்களிலே இருந்து வருகின்றன. அவை முழுமை பெற்றவை அல்ல என்றாலும், அவற்றைச் சூத்திரங்களாகக் கொண்டு காந்திய நெறியில், சத்தியாக்கிரக முறையில் நமக்கு ஏற்பட்டுள்ள அனுபவத்தைக் கொண்டு விரிவாகப் பொருள் கூற முடியும். அந்த நம்பிக்கையுடன்தான் நான் இன்று உங்கள் முன் பேசுகின்றேன்.

காந்தியப் பொருளாதாரம் பாரத மக்களுக்குப் புதியதன்று. நமது சமுதாயத்தினுடைய பழமைதருமங்களின்-வாழ்க்கை நெறிகளின் - சமூக நீதிகளின் தொகுப்பே காந்தியப் பொருளாதாரம். அது, வெறும் ரூபா-அணா-பைசா-கணக்குகளையோ, மக்கள் தொகை-மக்களின் சராசரி வருமானம் போன்ற புள்ளி விபரங்களை மட்டுமோ அடிப்படையாகக் கொண்ட கணித சாத்திரமன்று. தருமங்களை வேர்களாகக் கொண்டு எழுந்த சமதர்ம விருட்சம் என்று சொல்லலாம்.

காந்தியப் பொருளாதாரம் எத்தகைய சமுதாயத்தை அமைக்க விரும்புகின்றது?

மனிதனை மனிதன் சுரண்டிப் பிழைக்கும் கொடுமையை;

மனிதன் தன் உழைப்பைக் கொண்டு வாழாமல், பிறர் உழைப்பால் வாழும் சோம்பேறி வாழ்க்கையை;

தேவைக்கதிகமாகவே பண்டங்களையும் பொருள்களையும் திரட்டிப் பதுக்கும் திருட்டுக் குணத்தை, உற்பத்திக் கருவிகளை, நவீன ராட்சத யந்திரங்களைப் பெற்றுவிட்ட காரணத்தால், பிறர் மீது ஆதிக்கம் செலுத்தும் அநீதியை;

அடியோடு, ஆணி வேரோடு அழித்துவிட்டு ஒரு நல்ல சமுதாயத்தை அமைக்கவே காந்தியப் பொருளாதாரம் விரும்புகின்றது.

பாரத நாட்டுப் பல்கலைக் கழகங்களில் பொருளாதாரப் பாடம் போதிக்கப்படுகிறது. நம்மிடையே பொருளாதாரப் பண்டிதர்களும் ஏராளமாக இருக்கின்றனர். ஆனால், பொருளாதாரத்துறையில் அவர்களுடைய பார்வை வேறு; காந்தியவாதியின் பார்வை வேறு. நமது பொருளாதாரப் பண்டிதர்கள் மேற்கத்திய பாணியில் ஆங்கிலப் பொருளாதாரப் பண்டிதர்கள் எழுதிய நூல்களைக் கொண்டு பொருளாதாரம் கற்றவர்கள். அவர்களுடைய பாண்டித்துவம் நமக்குப் பயன்படாது என்பதோடு, காந்தியப் பொருளாதாரத்தை அவர்கள் புரிந்து கொள்வதுகூடக் கஷ்டமென்று எனக்குத் தோன்றுகின்றது.

சாம்ராஜ்யங்களின் தலைநகரில் தோன்றும் பொருளாதாரப் பண்டிதர்களோ, அவர்கள் எழுதியுள்ள பொருளாதார நூல்களோ உலக சாம்ராஜ்யங்களுக்காகவே படைக்கப்பட்டதென்ற நம்பிக்கையில் பிறந்தவை யாகும்.

காந்தியவாதியோ, 'தன்னிலே உலகம்' என்றோ, 'தனக்காகத்தான் இந்த உலகம்' என்றோ எண்ணுவதில்லை. தனக்காகவும் இந்த உலகம் இருக்கிறது என்றும், உலகத்திற்காகவும் நாம் இருக்கிறோம் என்பதையே வாழ்க்கை லட்சியமாகக் கொள்கிறார் காந்தியவாதி.

காந்தியப் பொருளாதாரம், பாரதத்தில் மட்டுமன்றி, மனித சமுதாயம் முழுவதிலுமே சுரண்டலற்ற சுகவாழ்வைத் தோற்றுவிக்க விரும்புகின்றது. ஆம்; தேசபக்தி என்ற எல்லையைக் கடந்து செல்கிறது பொருளாதாரத் துறையில் காந்தியப் பார்வை.

காந்தியப் பொருளாதாரத்தில் நவீன யந்திரங்களுக்கு இடமே இல்லை என்று கருதுவது தவறு. ஆனால், அவை விதிவிலக்காகவே இருக்க வேண்டும். ராட்சசத் தன்மை வாய்ந்த யந்திரங்களைக் கொண்டு சமுதாயத்தில் பொருளாதார முன்னேற்றம் ஏற்படுவதை காந்தியப் பொருளாதாரம் அனுமதிக்கவில்லை. அதே நேரத்தில் அவசியத்தை முன்னிட்டுத் தவிர்க்க முடியாத இடங்களில் அத்தகைய யந்திரங்கள் பயன்படுத்தப்படுவதை காந்தியடிகள் ஆட்சேபிக்கவில்லை. இதனை ஒரு குழப்பமாகக் கருதத் தேவையில்லை. எதற்கும் அடிமைப்பட்டு விடாமல், எதையும் பயன்படுத்தலாம் என்பதே இதன் பொருள். ராட்சச யந்திரங்களைக் காந்தியவாதி வெறுக்கக் காரணமென்ன? யந்திர சாதனங்கள் மனிதனுடைய அறிவு வளர்ச்சியைக் காட்டினாலும் விஞ்ஞான அற்புத சாதனைகளை விளக்கினாலும், அவற்றினால் நன்மையை விட, தீமையே அதிகமாக விளைந்திருக்கின்றது.

முதலிரண்டு மகா யுத்தங்கள் தோன்றியதற்கும், மற்றொரு மகாயுத்தம் தோன்றக் கூடும் என்ற நிலை நீடித்து வருவதற்கும் ராட்சச ரீதியான யந்திரங்களின் பெருக்கமே முக்கிய காரணமாகும்.

வரலாற்றில் கிடைத்துவிட்ட முன் வாய்ப்புக் காரணமாக ஒரு சில நாடுகள் பிரமாண்டமான யந்திரங்களைச் சமைத்து அவற்றின் மூலம் நவீன தொழில் துறையில் பெருமளவுக்கு முன்னேறி விட்டன. பண்டங்களை, உள்நாட்டின் தேவைக்குப் பல மடங்கு அதிகமாகவே உற்பத்தி செய்கின்றன. உற்பத்திப்பெருக்கம் ஒருவகையில் வரவேற்கத் தக்கதென்றாலும், அவற்றை விற்பதற்கான மார்க்கெட்டுகளைப் பயன்படுத்த நவீன தொழில் துறையில் முன்னேறாத நாடுகளை அடிமைப்படுத்தி, முன்னேற முடியாமலும் தடைகள் விதித்து, அவற்றின் மீது அரசியல் ரீதியாக ஆதிக்கம் செலுத்த வேண்டிய நிலைமையும் நவீன தொழில் துறையில் முன்னேறி விட்ட ஒருசில நாடுகளுக்கு ஏற்பட்டு விட்டன. இதன் விளைவாக எத்தனை எத்தனையோ அநீதிகள் இழைக்கப்பட்டுவிட்டன. இரண்டு மகா யுத்தங்களும், வேறுபல குட்டி யுத்தங்களும் தவிர்க்கமுடியாத வகையில் தோன்றிவிட்டன.

இந்த தீமைகளுக்கெல்லாம் பரிகாரமாக அமைந்திருக்கிறது காந்தியப் பொருளாதாரம்.

மேற்கத்திய வல்லரசுகள் ஒரே உலகம் என்றோ, உலக ஒருமைப்பாடு என்றோ பேசுவதெல்லாம், 'உறவு' என்ற பண்பு காரணமாக எழுந்த அன்பினலன்று. தங்கள் நாடுகளில் உற்பத்தியாகும் பண்டங்களை விற்க பிற நாடுகளைப் பயன்படுத்துவதற்கே.

காலனி நாடுகள், குடியேற்ற நாடுகள், காமன்வெல்த் நாடுகள் என எந்தப் பெயரால் அழைக்கப் பட்டாலும், அவை எல்லாம், தொழில் துறையில் முன்னேறிவிட்ட ஏதோ ஒரு நாட்டுக்கு அடிமைப்பட்டவையாகவே இருக்கின்றன.

வர்த்தக ஒப்பந்தம், பரஸ்பர உதவி, பொருளாதார உதவி,

(10ம் பக்கம் பார்க்க)

கண்டேன், கண்டறியாதன கண்டேன்!

(2)

நான்காவது மாநாடு என்பதைக் குறிப்பிட நான்கு மகுடங்கள் கொண்ட விமானத்தின் கீழே தனியாகப் போடப்பட்ட அழகிய ஆசனத்தில் ம. பொ. சி. அமர்ந்திருந்தார். நான்கு புரவிகள் விமானத்தை ஈர்த்துச் செல்வது போன்ற காட்சி. புஷ்பக விமானத்துக்குப் பின்னே வெளியூர்களிலிருந்து மாநாட்டுக்கு வந்த பிரதிநிதிகளை மோட்டார் கார்கள் ஒரு மைல் தூரத்தில் ஒன்றன் பின் ஒன்றாக, ஒழுங்கு வரிசையோடு ஊர்ந்து சென்றன.

ஊர்வலத்தின் அமைப்பை இவ்வளவு சுருக்கத்தில் நான் கூறி விட்டேன். ஆனாலும் அதனைக் கண்ணால் கண்டவர்களுக்கேற்பட்ட உணர்ச்சியை, இதைப் படிப்போருக்கு ஏற்படுத்த எனக்குச் சக்தியில்லை என்பதனை நான் உணருகிறேன்.

இராமனைக் கண்ட மிதிலைப் பெண்களின் நிலையைக் கூறும் கம்பர், 'தோள் கண்டார் தோளே கண்டார், தொடுகழற் கமலமன்ன தாள்கண்டார் தாளேகண்டார், தடக்கை கண்டாரும் அஃதே' என்று சொன்னவர், வாள் கண்ட கண்ணார் யாரே வடிவினை முடியக் கண்டார் என்கிறார்.

அதுபோல, வேலூரில் நடைபெற்ற மாநாட்டுத் தலைவர் ஊர்வலத்தைக் கண்டவர்களும் இறுதி வரை முழுமையாகக் காணமுடியவில்லை. ஜன நெருக்கடியில் ஊர்வலத்தில் யார் யார் இருக்கிறார்கள், என்னென்ன காட்சிகள் இருக்கின்றன என்பதனை அமைதியாகக் கண்டு மகிழ இயலவில்லை.

இவ்வளவு சொல்ல வந்த நானே ஒன்றை மறந்தேன். வேறு ஒரு அரசியல் கட்சியின் ஊர்வலத்தில் இல்லாத ஒரு காட்சியை வேலூரில் கண்டேன். கோவையில் நடைபெற்ற அரசியல் மாநாடொன்றின் ஊர்வலத்தில் ஈ. வெ. ரா., ஈ. வெ. கி. சம்பத், காமராசர், ம. பொ. சி. ஆகியோரை [illegible] பாவனையில் வேஷித்திருந்த ஊர்வலத்தில் எடுத்துச் சென்றார்களாம், அவர்களைப் பழிக்கின்ற கட்சியினர்.

அதைப்போல் சென்னையில் நடைபெற்ற ஒரு அரசியல்கட்சி ஊர்வலத்தில், கோவையில் நடைபெற்ற அரசியல் மாநாட்டுத் தலைவர்களைப் பழிக்கும் வகையில் [illegible] எடுத்துச் சென்றுள்ளார்கள்.

வேலூர் ஊர்வலத்திலும் சித்திரங்கள் இருந்தன; சிலைகளும் இருந்தன. அந்தச் சித்திரங்கள், சிலைகள் மாற்றுக் கட்சியின் தலைவர்களைப் பழிக்க வில்லை. தமிழர் எல்லோரும் வழிபடத் தக்க வள்ளுவர், கண்ணகி, கம்பர், கட்டபொம்மன், வ. உ. சி. ஆகிய சான்றோர்களின் உருவச் சிலைகள் நான்கு சக்கரங்கள் கொண்ட ஒரு ரதத்தில் வைக்கப்பட்டிருந்தன. காங்கேயநல்லூர் தமிழரசுக் கழகத்தைச் சார்ந்த திரு. நடராஜன் சிலைகள் சென்ற அணி வகுப்புக்குத் தலைமை வகித்துச் சென்றார். தமிழரசுக் கழகம் கலாசார இயக்கம் என்பதனைக் காட்டியது இந்தக் காட்சி. அங்கே அருவருப்புக்கு இடமேது?

ஊர்வலம் சென்ற வழிகளில் உற்சாகமிக்க இளைஞர்கள் சிலர் அதிர்வெடிகளை வெடித்துச் சென்றனர். ஊர்வலம் புறப்படுவதற்கு முன்பே போக்குவரத்து ஸ்தம்பித்து விட்டது.

காட்பாடி ரோடிலிருந்து புறப்பட்ட ஊர்வலம் அந்த ரோடைக் கடப்பதற்கு நெடுநேரமானது. அதனால், பஸ், லாரி முதலியவற்றின் போக்குவரத்து சுமார் ஒரு மணி நேரம் தடைப்பட்டு விட்டது. போலீசார் பாதுகாப்பிலேயே ஊர்வலம் சென்றது. அதிகாரம், ஊர்வலத்தின் துவக்கத்திலிருந்து இறுதிவரை நான்கு சாதாரணப் போலீசாரும், இரண்டொரு சிறிய அதிகாரிகளுமே ஊர்வலத்தைக் கண்காணித்து வந்தனர். அடேயப்பா! வேறு கட்சியினர் ஊர்வலம் வந்தால் அவர்கள் செல்லும் பாதையிலே தடை செய்து போக்குவரத்து வேறு பாதைக்குத் திருப்பி விடப்படும். அப்படிச் செய்த பின்னரும், ஊர்வலத்தின் வலப்புறமும் இடப்புறமும் ஆயுதம் தாங்கிய போலீஸ் படைகள் வான்களிலே ஊர்ந்து செல்லக் காண்கிறோம்.

இந்தக் காட்சியை வேலூரிலே நான் காணவில்லை. இது பற்றி ம. பொ. சி. தம் கருத்தைத் தெரிவிக்கையில் 'நமக்கு யாரும் பகைவர்களில்லை; நாமும் யாருக்கும் பகைவர் களல்லோம். நாம் யாரைக் கண்டும் பயப்படவில்லை; நம்மிடமும் யாருக்கும் பயமில்லை. அதனால் நம் ஊர்வலத்தில் போலீஸ் படை வரவில்லை' என்று கூறினார்.

ஊர்வலம், காட்பாடி ரோடு, ஆற்காடு ரோடு, சைதாப்பேட்டை, மெயின் பஜார், மண்டி வீதி, பஸ் ஸ்டாண்ட், லாங் பஜார், ஆபீசர்லேன் ஆகியவற்றைக் கடந்து கோட்டை மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த பாரி பந்தலை அடைந்தது.

மெயின் பஜாரை அடைந்தபோது ஜனநெருக்கடி சொல்லி முடியாது. ஊர்வலம் சென்ற ஒவ்வொரு வீதியிலும் வீட்டு வாயிற்படிகளிலும், மேல் மாடிகளிலும் ஆண்களும் பெண்களும் நெருக்கியடித்துக் கொண்டு நின்றவண்ணம் ம. பொ. சி. ஊர்வலம் செல்லும் காட்சியைக் கண்டு களித்தனர். பல இடங்களில் பூமாரி பொழிந்தனர். ஒவ்வொரு வீதியிலும் எண்ணற்ற வீடுகளின் அருகே ம. பொ. சி.க்கு ஆரத்தி எடுத்து மாலைகள் அணிவித்தனர். இனிப்பான பானங்கள் கொடுத்து அருந்தச் சிறப்புச் செய்தனர் மக்கள். ம.பொ.சி. அமர்ந்திருந்த புஷ்பக விமானம் மிக உயரமாக இருந்ததால் அதைக் கண்டு போட வந்த மாலைகளை எல்லாம் வாங்கி ம.பொ.சி.க்கு அணிவித்து வந்தார் கலைக் காவலர் வேணு.

ஊர்வலத்திற்கு சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர் திரு. படீர் ராசகோபாலன் தலைமையேற்று நடத்தினர். அவரும், இலக்கிய மாநாட்டு தலைவர் கல்லூர் தி.க. சண்முகமும், அரசியல் மாநாட்டுத் திறப்பாளர் கலைக்காவலர் எம். ஏ. வேணுவும் புஷ்ப விமானத்தில் அமர்ந்திருந்தனர். வரவேற்புக் குழுத் தலைவர் வே. கி. குப்புசாமி விமானத்திற்கு முன்பு அமர்ந்து சாரதியம் செய்து வந்தார்.

முச்சந்திதோறும் தமிழரசுக் கழகக் கிளைகளின் பெயரால் அழகிய பந்தல்கள் அமைக்கப்பட்டு, அந்தப் பந்தல்களில் ம. பொ. சி. அமர்ந்திருந்த புஷ்பக விமானம் வந்ததும் மலர்மாரி பொழிந்து அவருக்கு மரியாதை தெரிவிக்கப் பட்டது. திருவண்ணமலை, சைதாப்பேட்டை, ஆரணி தோட்டம் கிளைக் கழகங்களும், வேலூர் ஷராப் கடைக்காரர் சங்கமும் அமைத்திருந்த பந்தல்கள் குறிப்பிடத் தக்கவையாகும்.

பாலஸ் கபே, ஆண்டாள் கபே, முதலிய ஓட்டல்களின் முன் ஊர்வலம் வந்தபோது தாங்கமுடியாத மிகப் பெரிய மாலைகள் உரிமையாளர்களால் ம. பொ. சி.க்கு அணிவிக்கப் பட்டன. திரு. ரூப்ஜி என்ற வடநாட்டு ஷராப் கடை சங்கத்தார் சார்பில் மிகப் பெரிய மாலை ஒன்றை தம் கரத்தாலேயே அணிவிக்கவேண்டுமென்ற பிடிவாதத்தில் மிகச் சிரமப் பட்டு புஷ்பக விமானத்தில் ஏறி மாலையை அணிவித்தார். ஓட்டல் தொழிலாளர்கள் பலரும் இன்னும் பல தொழிலாளர்கள் சார்பிலும் வழிநெடுக மாலைகள் அணிவிக்கப்பட்டன.

காலை 9.30 மணிக்குப் புறப்பட்ட ஊர்வலம் சரியாக 1-45 மணிக்குப் பாரி பந்தலை அடைந்தது. ஏற்கனவே ஊர்வலம் செல்வதாகத் திட்டமிடப்பட்டிருந்த பல தெருக்கள் வழிச் செல்ல நேரமில்லாமையால் கைவிடப்பட்டன. அதனால் ஒரு சிலருக்கு வருத்தமும் ஏற்படத்தான் நேரிட்டது.

இந்த ஊர்வலத்திலிருந்த மற்றொரு தனிச் சிறப்பு, ஊர்வலத்தின் அணிவகுப்பில் கலந்துகொண்ட பல்லாயிரக் கணக்கானவர்கள் தாம் ஏன் ஊர்வலம் செல்லுகிறோம் என்பதனை உணர்ந்து சென்றார்கள் என்பதுதான்.

அந்த ஊர்வலத்திலிருந்த கவர்ச்சியும் தொண்டர்களிடம் இருந்த உணர்ச்சியும் தமிழரசுக் கழகத்திற்குள்ள தனிச்சிறப்புக்களைக் காட்டின. தேர்தலில் நிற்காமல், எவர்பாலும் பகை உணர்ச்சி கொள்ளாத ஒரு கட்சியின் ஊர்வலம் இவ்வளவு பெரும் சிறப்புடன் நடக்குமென்பதனை அதனைக் காணாதவர்கள் கற்பனை செய்தும் பார்க்கமுடியாது.

'ஒழிக' என்ற அமங்கலக்குரல் எவர் வாயிலிருந்தும் எழவில்லை. 'வாழ்க' என்ற மங்கலச் சொல்லே கேட்போர் காது குளிர ஒலித்தது. எந்தச் சாதியாரும், மதத்தாரும், கட்சியாரும் ஊர்வலத்தை நெருங்கிப் பார்க்க முடிந்தது. அவ்வளவு பண்பார்ந்த ஊர்வலம்.

மாநில மாநாட்டின் இரண்டாவது நாள் காலை புறப்பட்ட மாபெரும் ஊர்வலம், வேலூர் நகரம் முழுவதையுமே மகிழ்ச்சியிலாழ்த்தி சரியாக 1-30 மணிக்கு பாரி பந்தலில் வந்து முடிவுற்றது. குருவாயூர் பொன்னம்மாள் இரண்டொரு பாடல்களைப் பாடிய பின்னர், மாநாட்டின் மாலை நிகழ்ச்சிகளைப் பொதுச் செயலாளர் கவி. கா. மு. ஷெரீப் மக்களுக்கு அறிவித்தார்.

அன்று மாலை 4-40 மணிக்கு இலக்கிய மாநாடு ஆரம்பமானது. முதல்

(7-ம் பக்கம் பார்க்க)

வேலூர் தீர்மானத்துக்கு பிரதமர் நேரு ஆதரவு!

—*—

வேலூரில் கூடிய தமிழரசுக் கழக மாநாடு, ஆளுங் கட்சியான காங்கிரசுக்கு, பிரிவினைக் கோரும் கட்சிகளுக்கு எதிராக தார்மீக ரீதியில் ஆதரவளிப்பதென முடிவு செய்திருக்கிறது. அதே நேரத்தில், ஆளுங் கட்சிக்கு எல்லை கடந்த எண்ணிக்கை பலம் ஏற்படுவதால், ஜனநாயகத்திற்கு ஏற்படும் நலிவைத் தடுக்க, தேசிய ஐக்கியத்தையும், சோஷலிச சித்தாந்தத்தையும், மாநில சுயாட்சிக் கோரிக்கையையும் ஏற்கின்ற எதிர்க்கட்சிகளின் அபேட்சகர்களில் தகுதியும் திறமையும் உடையவர்களுக்குப் பூரண ஆதரவளிப்பதென்றும் முடிவெடுத்திருக்கின்றது. இந்தத் தீர்மானத்தைச் சரியானதென்று உறுதிப்படுத்தும் வகையில் பிரதமர் நேரு சென்னைக் கடற்கரையில் பேசியிருப்பதைக் கீழே தருகிறோம்:

எதிர்க் கட்சிகள் இருப்பதை நான் வரவேற்கிறேன். எதிர்க்கட்சிகள் இல்லா விட்டால் காங்கிரஸ் கட்சி செயலற்ற நிலைக்கு வந்துவிடும். எதிர்க் கட்சிகள் இருந்தால்தான் அவர்கள் சொல்லும் குறைகளையும் குற்றச் சாட்டுகளையும் கண்டு காங்கிரஸ் கட்சி தீவிரமான செயலில் ஈடுபட்டுச் சுறுசுறுப்பாக இயங்கும்.

தேர்தல் களத்திலே...

—*—

பொதுத் தேர்தலுக்கான நாட்கள் நெருங்கிக் கொண்டிருக்கின்றன. தமிழரசுக் கழகக் கிளைகளின் கிளர்களும், கழக ஆதரவாளர்களும் வேலூர் தீர்மானப்படி தங்களுடைய ஆதரவுக்குரிய அபேட்சகர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுடைய வெற்றிக்காக வேலைசெய்து கொண்டிருக்கின்றனர். மாவட்டக் கழகங்களும் மாவட்டத் தேர்தல் குழுக்களும் அவர்களுக்கு வழி காட்டி வருகின்றன.

தமிழரசுக் கழகத்தின் நற்பெயருக்குக் களங்கமில்லாத வகையில் தேர்தல் களத்தில் நம்மவர்கள் பணியாற்றுவார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

இந்தப் பொதுத்தேர்தலில் ஏற்பட்டுள்ளது போன்ற தர்மசங்கடமான ஒரு நிலைமை முன் எந்தத் தேர்தலிலும் தமிழரசுக் கழகத்திற்கு ஏற்பட்டதே இல்லை. காரணம், தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் அதிகப்பட்டு, அவற்றிடையே போட்டி வலுத்திருப்பதுதான். நாடு முழுவதிலும் ஒரே ஒரு கட்சியை ஆதரித்து வேலை செய்யும் நிலைமை நமக்கு ஏற்பட்டிருந்தால், நமது ஆற்றல் நன்கு வெளிப்பட்டிருக்கும். அந்த நிலை இல்லாததாலும், எதிர்க் கட்சிகளிடையே ஒற்றுமை இன்றி, அவை ஒன்றோடொன்று மோதிக் கொள்வதாலும் நமது நிலைமை தருமசங்கடமாகி விட்டது. ஆயினும், எத்தகைய பிரதிபலனையும் கருதாது இந்தத் தேர்தலில் நாம் கடமையாற்றுவதால் சங்கடத்தைச் சமாளிக்கும் சக்தி நமக்கு இருக்கிறது.

நாம் ஆதரவு தருவதற்கான அபேட்சகர்கள் பட்டியலைத் தயாரிப்பதற்கான பொறுப்பை மாவட்டத் தேர்தல் குழுக்களிடம் ஒப்புவித்தேன். பட்டியலைத் தயாரித்து தலைமைக் கழகத்திற்கு அனுப்பி அதன் அங்கீகாரத்தைப் பெற வேண்டுமென்றும் ஆணையிட்டிருந்தேன். ஆனால், ஒரு சில மாவட்டங்களில் பட்டியல் தயாரித்து முடிந்தாலும், தலைமைக் கழகத்தின் அங்கீகாரம் பெறுவதற்கு முன்பு அது பத்திரிகைகளுக்குத் தரப்பட்டிருக்கிறது. அதனால், தவறான கருத்துக்கள் பரவ இடமளிக்கப்பட்டு விட்டது.

ஒன்றிரு ஊர்களிலுள்ள கிளைகள் மாவட்டத்தேர்தல் குழுவின் முடிவுக்கு மாறாக, ஸ்தல நிலைமையையே பெரிதாகக் கொண்டு செயல்பட விரும்புகின்றன.

இப்படிப்பட்ட தவறுகள் இனியும் நேராதவாறு தமிழரசுக் கழகத் தோழர்கள் கவனித்துக் கொள்ள வேண்டும். பிறருக்கு உதவி புரிகின்ற ஆர்வத்தில் நமது ஸ்தாபனத்தின் கட்டுக்கோப்பைக் குலைத்துவிடக் கூடாது.

மற்றவர்களோடு நமக்கு ஏற்படும் நட்பு தேர்தலோடு முடிந்துவிடும். ஆனால், நமது ஸ்தாபனம் தேர்தலுக்குப் பிறகும் நீடித்து நிலைத்திருக்கும்.

ஆகவே, 'ஒரு நாள் கூத்துக்கு மீசையைச் சிரைத்தான்' என்ற பழமொழிபோல, சில நாட்களே நடந்து முடிகின்ற தேர்தல் நாடகத்துக்காக தமிழினத்தின் ஒரே தேசிய அமைப்பான தமிழரசுக் கழகம் பலவீனமடைந்துவிடக் கூடாது.

தமிழரசுக் கழகம், தான் ஏற்றுக் கொண்டுள்ள கொள்கைகள் காரணமாக தனி ஒரு கட்சியாக அல்லாமல், எல்லாக் கட்சிகளாலும் விரும்பத்தக்க தேசிய அமைப்பாக இயங்கி வருகின்றது. அதனால், ஏதேனும் ஒரு கட்சியை முழுக்க முழுக்க ஆதரித்து மற்ற எல்லாக் கட்சிகளையும் எதிர்த்துப் போராடும் பொறுப்பை அது ஏற்பதற்கில்லை. ஏற்றால், அதன் தேசியத் தன்மை அழிந்து அதுவும் நீடிப்பதற்குத் தகுதியற்றதாகி விடும். அதனுற்றான், நாம் தேர்தலில் நடுநிலைமையான ஒரு கொள்கையை மேற்கொண்டிருக்கிறோம். 'என்னுடைய வாழ்வெல்லாம் என்னுடைய விரோதி' என்றோ, 'என்னுடைய விரோதிக்கு எவரெல்லாம் நண்பர்களோ அவர்களெல்லாம் என் விரோதிகள்!' என்றோ எண்ணும் பண்புடையவர்களுக்கு நமது நடுநிலைமையான முடிவு வெறுப்பைத் தரலாம். ஆனால், நம்மைப் பொறுத்தவரையில் இதுதான் சரியான முடிவென்பதில் நமக்கு ஐயமில்லை. நமது முடிவுகண்டு முணுமுணுப்பவர்களும் தேர்தல் வெறி அடங்கிய பிறகு, அதிலுள்ள நியாயத்தை உணருவார்கள் என்பதில் ஐயமில்லை. நாம் கலந்து கொண்டிருக்கும் கழகத்தைச் சார்ந்தவர்கள் அல்ல; மனம் போன போக்கில் சென்று தேர்தல் களத்திலே ஆட்டம் போட!

மற்ற கட்சிகள் காங்கிரசை முழு மூச்சோடு எதிர்த்துப் போராடுகின்றன என்றால், அவை தேர்தலில் நேரடியாகப் போட்டியிடுவதால், அந்தப்போராட்டம் தவிர்க்கமுடியாததாகிறது. அந்தக் கட்சிகள் கூட தாங்கள் போட்டியிடாத தொகுதிகளில் தங்களுடைய ஆதரவு எந்தக் கட்சிக்கு என்பதை முடிவுசெய்யாமல் வைத்திருக்கின்றன. மற்று, பல தொகுதிகளில் தி. மு. க. கம்யூனிஸ்டு மோதல் கடுமையாக இருக்க, சில தொகுதிகளில் வெளிப்படையான ஒத்துழைப்பு காணப்படுகிறது. சமுதாயத்திலேயே மதப் பாகுபாடு கூடாதென்று கூறிவரும் தி. மு. க., அரசியலிலே மதக் கட்சியாக விளங்கும் லீகோடு உறவாடுகிறது.

ஒன்றிரு கட்சிகள் சொற்பத் தொகுதிகளில் காங்கிரசுக்கு எதிராகப் போட்டியிட்டு, மற்ற எல்லா தொகுதிகளிலும் உள்ளூர காங்கிரசுக்கு ஆதரவளிக்கின்றன. நாம் அப்படி நடந்து கொள்ள வில்லை. நமது கிளைகளுக்குள் எல்லாத் தொகுதிகளிலுமே நமது நிலை என்ன என்பதை வாக்காளர்களுக்குத் தெரிவித்து விட்டோம். நமது தேர்தல் கொள்கையிலே ஒளிவு மறைவு கொஞ்சங்கூட இல்லை.

நம்முடைய ஆதரவுக் குரிய கட்சிகள் சில தொகுதிகளில் வெற்றிக்குரிய நம்பிக்கையோடும், வேறு சில தொகுதிகளில் வெற்றிக்குரிய நம்பிக்கை இல்லாத நிலையில் கட்சி வளர்ச்சியை மட்டுமே கருதியும் அபேட்சகர்களை நிறுத்தி வைத்திருக்கின்றன.

இரண்டாவதாகச் சொன்ன அபேட்சகர்களை நாம் ஆதரித்தாகவேண்டிய கடமையோ, கட்டுப்பாடோ நமக்கு இல்லை. அப்படி ஆதரித்து தேசிய சக்தியின் வாக்குகளைப் பிரிப்பது பிரிவினைச் சக்திகள் வெற்றி பெறவே உதவும். இந்தக் காரணத்தால் ஒரு கட்சியின் அபேட்சகர்களில் சிலருக்கு ஆதரவாகவும், வேறு சிலருக்கு எதிராகவும் வேலை செய்வது தவிர்க்க முடியாததாகிறது. இதனால் யாரேனும் நம்மைக் குறை கூறினால், நம்மவர்கள் வருந்தத் தேவை இல்லை. எல்லோரையும் ஏககாலத்தில் திருப்தி செய்ய நம்மால் முடியாது. அப்படித் திருப்தி செய்து நாம் அடையப்போவது எதுவுமில்லை.

மத்திய செயற்குழு எதிர்பார்த்ததற்கு அதிகமான தொகுதிகளில் காங்கிரஸ் அபேட்சகர்களுக்கு நமது தார்மீக ஆதரவை வழங்க சில மாவட்ட கழகங்கள் முடிவு செய்திருக்கின்றன. ஆயினும், நாம் தார்மீக ரீதியில் ஆதரவு தரக்கூடிய தொகுதிகளில் நம்முடைய உதவியோ ஒத்துழைப்போ ஆக்க வழியில்தான் அமைய வேண்டும். மற்றவர்களைத் தாக்கும் வகையில் இருக்கக்கூடாது.

நிற்க, எம். பி. தொகுதி ஒன்றில் காங்கிரசுக்கு ஆதரவளிக்கும் போது, அதன் கீழே உள்ள அசெம்பிளித் தொகுதிகளில் ஒன்றிரண்டில் வேறொரு கட்சிக்கு ஆதரவளிக்கக்கூடிய நிலையில் இருக்கிறோம். இதைத் தவிர்க்க முயன்றும் [illegible].

இந்தச் சிக்கல்களை எல்லாம் மனதில் வைத்து கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளுமாறு தமிழரசு இயக்கத் தோழர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ம. பொ. சிவஞானம்
தலைவர், தமிழரசுக் கழகம்.

இன்னொரு வீர ஜான்ஸி!

வெள்ளையரை எதிர்த்துப் போரிட்டு மாண்ட வீராங்கனை இராணி லட்சுமிபாய் அரசாண்ட ஜான்ஸியில், ஆண் குலமே அதிசயிக்கத்தக்கவாறு வீரசாகஸம் புரிந்திருக்கிறாள், இளம் பெண்ணொருத்தி.

லலிதா தேவி என்ற அப்பெண், காட்டில் விறகு வெட்டுகையில், 9 அடி நீளமுள்ள புலியொன்று திடீரென்று அவளைத் தாக்கியது. அவள் செய்ததென்ன? அழுதாளா? அலறினாளா? அல்லது மூர்ச்சை யடைந்து விழுந்தாளா? இல்லை, 'பகைவன் எதிர்ப்பட்டால் கிடைத்ததை எடுத்து அடி' என்ற பழமொழிப்படி, தன் கையிலிருந்த கோடரியால் புலியை வெட்டினாள். புலியும் அவளுடன் போராடியது. இறுதியில் வெட்டுண்ட புலி செத்து மாண்டது. வீரப்பெண் வெற்றி பெற்றாள். என்னே வியப்பு!

அறத்தினால் வீழ்ந்துவிட்ட பெல்ஜியத்தைப் பாடிய பாரதி, அதன் வீரத்திற்கு 'முறத்தினால் புலியை ஓட்டிய மொய்வரைக் குறப்பெண்ணை' உவமை கூறினார். அவர் கூறியது பழங்கதையை நினைவில் வைத்து. இதோ, வீராங்கனை லலிதா, பாரதப் பெண்குலத்தின் வீரத்திற்குப் புத்துயிர் அளித்து விட்டாள். அவளுக்கு மத்திய அரசு பரிசு தந்து, தபால் தலையில் போட்டுப் பாராட்ட வேண்டும்.

வாழ்க, வீராங்கனை லலிதா!

செங்கோல்

11-2-62 ★ ஞாயிறு

வேலூர் கோட்டை

வேலூர் நகரிலே வரலாற்றுச் சிறப்புடைய கோட்டையும் அதற்குள்ளே சிற்ப வேலைப்பாடுடைய கோயிலும் இருக்கின்றன. இந்தக் கோயிலிலே இப்போது விக்கிரகங்கள் இல்லை. முன்னர் ஜலகண்டேசுவரர் விக்கிரகம் இருந்து மக்கள் வழிபாடு நிகழ்த்தி வந்திருக்கின்றனர். ஆனால், பின்னர் யாரோ, ஏதோ ஒரு சூழ்நிலையில் விக்கிரகத்தை அகற்றி விட்டதாகத் தெரிகிறது. அதுமுதல் வேலூர்கோட்டைக் கோயில் விக்கிரகம் இல்லாத வெறுங் கோயிலாகி விட்டது.

இதையே ஒரு காரணமாகக் கொண்டு வேலூர் கோட்டையும் கோயிலும் மத்திய அரசின் புதை பொருள் இலாகாவிடம் ஒப்புவிக்கப் பட்டுள்ளன. இது பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் நிகழ்ந்தது. இப்போது, உமாயூன் கபீர் நிர்வகிக்கும் கலாச்சார இலாகாவோடு இணைக்கப்பட்டிருக்கிறது புதை பொருள் இலாகா.

"வேலூர் கோட்டை" என்பதெல்லாம் சுற்றியுள்ள கனமதிலும், அதைச் சுற்றியுள்ள அகழியுமேதான். மற்ற படி டில்லியிலுள்ள செங்கோட்டையைப் போலவோ, ஆக்ரா கோட்டையைப் போலவோ உள்ளே அரசர்கள் வாழ்ந்த அரண்மனைகளோ ஆயுதக் கிடங்குகளோ இருக்க வில்லை. அதாவது, அரசியல்ரீதியான முக்கியத்துவத்தைக் குறிக்கக் கூடிய கட்டிடங்கள் கோட்டைக்குள்ளே பிரதானத்துவம் பெறவில்லை.

இதற்கு மாறாக, கோயில்களும், தெய்வ மண்டபங்களுமே கோட்டையின் உட்புறம் முழுவதும் நிறைந்திருக்கின்றன. வழிபடுவதற்கான பிரகாரமும் ஒழுங்காக அமைந்திருக்கின்றது. சிற்ப வேலைப்பாடுகள் சிந்தையைக் கவருகின்றன.

சுருங்கச் சொன்னால், கோட்டைக்காகக் கோயில் இல்லை. கோயிலுக்காகவே கோட்டை இருக்கிறது.

சுற்று மதிலும் அகழியும் கொண்ட கோட்டை இருப்பதனாலேயே அதனுள்ளிருக்கும் கோயில் இரண்டாந்தரமாகி விடாது. கோட்டை பாணியிலே கோயில்களை அமைப்பது பண்டைத் தமிழகத்தின் வழக்கம். ஏன், திருவரங்கம் முழுவதுமே ஆற்று நீரை அகழியாகக் கொண்டு கோட்டை, கொத்தளப் பாணியிலே சுற்று மதிலமைத்து அதற்குள்ளே ஸ்ரீரங்கநாதர் கோவிலிருப்பதைப் பார்க்கிறோம். அப்படித்தான் வேலூர் கோட்டைக் கோயிலும் இருக்கிறது.

யாரோ, எப்போதோ ஒரு விஷமியால் விக்கிரகம் அகற்றப்பட்டுவிட்ட தனாலேயே வேலூர் கோயிலின் முக்கியத்துவம் குறைந்து விடாது.

அரசாங்க மில்லாத கோட்டை ஞாபகார்த்தச் சின்னமாகலாம். ஆனால், விக்கிரகமில்லாத கோயில் ஞாபகார்த்தச் சின்னமாகிவிடாது. அப்படி எங்கும் ஆனதாகச் செய்தி இல்லை.

வேலூர் நகர மக்கள் கோட்டைக் கோயிலில் மீண்டும் விக்கிரகத்தை வைத்து, அதனை வழிபாட்டுக்குரிய புனித ஸ்தலமாகச் செய்ய வேண்டுமென்று கோரிக்கை அனுப்பிருக்கின்றனர். திரு. உமாயூன்கபீர் அதனை ஏற்க வில்லையாம். வெறுங்கோயிலிலே மீண்டும் விக்கிரகத்தை வைக்கும் பிரச்னை ஒருபுற மிருக்கட்டும். சமய வழிபட்ட கோயிலை புதைபொருள் இலாகாவிடம் விட்டு வைப்பது சரிதானு? இதுவே நம்முன்புள்ள பிரச்னை.

வேலூர் கோட்டைக் கோயில் கட்டிடங்கள் பழுது பட்டுப் பாழடைந்துவிட்ட ஸ்தலமல்ல. இங்கு மங்குமாக சில பழுதுகளிருப்பினும், மிகக் குறைந்த செலவில் சீர் செய்துவிடக் கூடியவையே. விக்கிரகமில்லை என்பது புதைபொருள் இலாகாவிடம் போய்விடுவதற்கான காரணமாகிவிடாது. அப்படியானுல் இருக்கிற கோயில்களிலும் நாளை விக்கிரகங்கள் எடுபடுவதும், பின்னர், அந்தக் கோயில்களை புதை பொருள் இலாகா எடுத்துக் கொள்வதும் வழக்கமாகிவிடும்.

அன்னிய ஆட்சி காலத்தில் ஏற்பட்ட இந்த நிலை சுதந்திர ஆட்சியில் நீடிக்கக் கூடாது.

முதலில் வேலூர் கோட்டைக் கோயில் நிர்வாகம் மத்திய அரசினர் புதை பொருள் இலாகாவிடமிருந்து தமிழக அரசின் அறத்துறை இலாகாவுக்கு மாற்றப்பட வேண்டும். இதைச் செய்ய மத்திய அரசு தானே முன்வரவில்லை என்றால், இந்தப் பிரச்னையை உயர்நீதி மன்றத்திற்குக் கொண்டு செல்லவேண்டும். நீதிபதிகளின் தீர்ப்பு எதுவாக இருப்பினும் சரி; வேலூர் நகர மக்களை மட்டுமே கவர்ந்துள்ள இந்தப் பிரச்னை தமிழக மக்கள் கவனத்திற்கும் வர இது ஒன்றே வழி.

கோட்டைக் கோயிலை வழிபாட்டு ஸ்தலமாக மாற்ற வழி செய்வதற்கு வேலூர் நகர மக்கள் சார்பில் ஒரு தனிக் குழு வொன்று அமைக்கப் பட்டிருப்பதாக அறிகிறோம். அந்தக் குழுவினர் இந்தப் பிரச்னையை உயர்நீதி மன்றத்திற்குக் கொண்டு செல்ல முயல வேண்டும். அதில் வெற்றி கிடைக்க வில்லையானால், பொதுஜனக் கிளர்ச்சி இருக்கவே இருக்கிறது.

வேலூர் கோட்டைக் கோயில் மத்திய அரசிடமிருப்பதால் அதனைச் சுற்றியுள்ள மாபெரும் நிலப்பரப்பும் அதனுடைய ஆதிக்கத்திலேயே இருக்கிறது. அந்தத் திடலில் ஒரு சிறுநிகழ்ச்சி வைக்கவேண்டுமானாலும் மத்திய அரசின் அனுமதி தேவைப் படுகிறது. இது தமிழக மக்களின் உரிமைக்கு ஏற்பட்ட விபத்தாகும்.

இந்த மாநிலத்தில் உள்ள ஒருமைநானத்தை மத்திய அரசு நிருவகிப்பதைவிட தவறான அரசியல் ஆதிக்கம் வேறிருக்க முடியாது.

வேலூர் கோட்டையைத் தனது நிர்வாகத்தில் எடுத்துக் கொண்டிருக்கும் மத்திய அரசு அந்தக் கோட்டையோடு தொடர்புடைய- வேலூர் சிப்பாய் புரட்சியில் பங்கு கொண்டு உயர்நீத்த வீரத் தியாகிகளுக்குச் சிறப்புச் செய்ய முன்வரவில்லை.

சுதந்திரப் போர் நூற்றுண்டு விழாவின்போது, வடக்கே நிகழ்ந்த சிப்பாய்ப் புரட்சி சம்பந்தப்பட்ட வீரர்களுக்கு பல லட்சக் கணக்கான ரூபாய்கள் செலவழித்து நினைவுச் சின்னங்கள் ஏற்படுத்தியது மத்திய ஆட்சி. அதே காலத்தில், வேலூர் சிப்பாய்ப் புரட்சி வீரர்களுக்கு நினைவுச் சின்னம் வைத்திருக்கலாம். ஆனால், மத்திய அரசுக்கு நம் விஷயத்தில் நினைப்பில்லை. அதற்கு நினைப்பூட்டும் சக்தியும் நம் மாநில அரசுக்கு இல்லை.

இந்த லட்சணத்தில் வேலூர் கோட்டையை மத்திய அரசிடம் விட்டு வைப்பதில் யாருக்கு என்ன 'லாபமோ? கோயிலை ஞாபகார்த்தச் சின்னமாக்கி அதை புதைபொருள் இலாகாவிடம் விட்டுவைப்பதைவிட அநீதி வேறு இருக்க முடியாது. இதற்கு விரைவில் பரிகாரம் காணவேண்டும்.

கண்டறியாதன கண்டேன்...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

நாளன்று பல கட்சித் தலைவர்களும் கலந்து கொண்டதால்தான், பொது மக்கள் திரண்டார்கள் என்று சொல்ல இடமின்றி, முதல்நாளை விட இரண்டு மடங்குக் கூட்டம் இலக்கிய மாநாட்டிற்கு திரண்டிருந்தது.

மின்சார விளக்குகளால் இரவைப் பகலாக ஒளிவீசிய பாரிப் பந்தலிலே இடம் போதவில்லை. அதனால், மேடையின் வலதுபுறத்தே பிரதிநிதிகள் விடுதிக்குப் போடப்பட்டிருந்த தடுப்புக்கள் எடுக்கப்பட்டு மக்கள் அமருவதற்கு வசதி செய்து தரப்பட்டது.

வழக்கம்போல குருவாயூர் பொன்னம்மாள் இறைவணக்கம் பாடிய பிறகு, மறைமலை அடிகளாரின் அருமைத் திருமகன் தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரி தமிழ்ப்பேராசிரியர் மறை. திருநாவுக்கரசு இலக்கிய மாநாட்டைத் துவக்கி வைத்துப் பேசினார். (அவரது சொற்பொழிவு ஏற்கனவே 'செங்கோலி'ல் பிரசுரிக்கப்பட்டுள்ளது.)

மறை திருநாவுக்கரசு அவர்கள் தமிழரசுக் கழகத்திற்கும், தலைவர் ம. பொ. சி.யிடமும் எவ்வளவு அன்புடையவர் என்பதை அவருடைய பேச்சு நன்கு வெளிப்படுத்தியது. ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு மிக மிக அவசியமான ஒரு இயக்கம் என்பதனை எடுத்துக்காட்டி, அதற்கு ஆதி கூறினார் மரபுவழி தமிழ்ப் புலவரான மறை திருநாவுக்கரசு.

கல்லூர் தி. க. சண்முகம் இலக்கிய மாநாட்டிற்குத் தலைமை தாங்கி மிகச் சுவையானதொரு சொற்பொழிவு நிகழ்த்தினார். இலக்கிய ஞானமற்ற அரசியல் தலைவர்களின் போக்கால் தமிழ்மொழி தாழ்ந்து வருவதைத் துணிவாக எடுத்துக் காட்டினார். இலக்கியமும் அரசியலும் இணைந்தாலொழிய இன்பத் தமிழகம் முன்னேற்றம் காணமுடியாதென்று குறிப்பிட்டார். ஒருமாபெரும் புலவர் -அனுபவமிக்க ஆராய்ச்சியாளர் என்ற பெருமைகளுக்குரியவரானார் சண்முகம்.

காங்கிரஸ்காரரும், 'சிவாஜி' வார இதழின் ஆசிரியருமான திருலோக சீதாராம் பேசியபோது, மாநாட்டின் சிறப்பை வியந்து பாராட்டினார். அதிகாரமில்லாத, பொருள் பலமற்ற ஓர் சாதாரண மனிதரான ம. பொ. சி. இவ்வளவு பெருங் கூட்டம் பின்பற்றுவதைக் கண்டு வியப்படைகிறேன் என்று கூறினார். ஆனால், புதியதொரு ஆலோசனை கூறினார் போல "நீங்கள் பழைய இலக்கியங்களைப் பாராட்டினால் போதாது. புத்தம் புதிய இலக்கியங்களைப் படைக்க வேண்டும்" என்றார். அந்த ஆற்றலும் தமிழரசுக் கழகத்தாருக்கு உண்டு என்பதை அவருக்கு உணர்த்துவது போல், அவரை அடுத்துப் பேசிய புலவர் புவியரசு, தலைவர் ம. பொ. சி. மீது அருமையானதொரு "ஆற்றுப் படை" பாடினர்.

பாட்டு எழுத மட்டுமன்றி, அதனை அவையோர் சுவைக்கும் வண்ணம் பாடிக் காட்டவும் தமக்கு ஆற்றலுண்டு என்பதை மிகத் திறமையாக எடுத்துக் காட்டினார் புவியரசு. அவரே எழுதிய ஆற்றுப்படைப் பாடலை, பாட்டுடைத் தலைவன் முன்பே, பல்லாயிரக் கணக்கான மக்கள் காண அரங்கேற்றிய காட்சி அன்றைய மாநாட்டின் தனிச் சிறப்பாக அமைந்தது. புவியரசின் புலமையை பாராட்டாதாரில்லை. "எதிர் காலத்தின் மகாகவி" என்றார் மேடையிலிருந்த ஒரு தமிழ்ப் புலவர்.

பின்னர் புலவர் கீரன் பேசுகையில், என்றுமில்லாத ஒரு தனிச்சுவையை நகைச்சுவையோடு கலந்த பொருட்சுவையை பாரி பந்தலில் குழுமியிருந்த மக்களுக்கு விருந்து வைத்தார். மணிப்பிரவாள மொழியினர் "தமிழ்க் கொலை"யைச் சான்றுகளுடன் விளக்கி, சுவைமிக்கச் சந்தங்களிலே, வடமொழியோடு போட்டியிட்டு வெற்றிபெற்ற தமிழின் திறமையை அவையோர் மகிழும் வண்ணம் அறிவித்தார்.

இரண்டாவது மாநில மாநாட்டின் போது இலக்கிய மாநாட்டிற்குத் தலைமை தாங்கிச் சிறப்பித்த கோவை பி. எஸ். ஜி. கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. ம. ரா. போ. குருசாமி அவர்கள், "என்றும் எதிலும் எப்போதும் தமிழகத்தில் தமிழுக்கே ஆதிக்கம்" என்ற நம் கழகத்தின் கொள்கையை நன்கு விளக்கிப் பேசினார்.

'தமிழ் நாடு' பெயர் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறைப்பட்ட சட்டாம் பிள்ளை வெங்கட்ராமன் நகைச்சுவையாக சில வார்த்தைகள் பேசி, தமிழரசுக் கழகத்தின் தமக்குள்ள உறவை உறுதிப்படுத்தினார்.

சின்னக் கலைவாணரென்று சிறப்புப்பெயர் பெற்றுவிட்ட குலதெய்வம் இராசகோபால், மக்கள் செய்த ஆரவாரத்திற்கிடையே மேடையில் தோன்றி மிக அற்புதமான சொற்பொழிவொன்றை நிகழ்த்தினார். [illegible]

கல்லுப்பட்டிக் கவிராயர் எனப் படும் காசுக்கவி தமிழரசுக் கழகத் தோழர் கவிஞர் தேவராசன், தாம் இயற்றிய பாடல்களை இங்கேயின் புகழைப் போற்றும் கவிதைகளை அரங்கேற்றிப் பாடினர்.

இறுதியாக தலைவர் ம. பொ. சி. அவர்கள் அன்றைய இலக்கிய மாநாட்டைப் பற்றி [illegible] அவருடைய பேச்சோடு இலக்கிய மாநாடு முடிந்தது.

பொதுவாக இலக்கிய மாநாட்டில் பேசிய அத்தனை பேரும், ஆங்கில ஆதிக்கத்தை அழிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர். ஒரு இலக்கிய மாநாடு இவ்வளவு "சிறப்பாக நடக்க முடிந்ததே" என்று வியந்து கூறும் வண்ணம் இரண்டாவது நாள் மாநாடு நடந்து முடிந்தது.

அன்றிரவு அவ்வை தி. க. சண்முகம் தலைமையில், நகர் மனோகர் குழுவினர் "சாணக்கிய சபதம்" என்னும் நாடகத்தை நடித்துக் காட்டினர். நாடகத்தினிடையே கல்லூர் தி. க. சண்முகம் மனோகர் குழுவினரையும், அவர்கள் நடத்திய நாடகத்தினையும் பாராட்டிப் பேசினர்.

நாடகம் துவங்குவதற்கு முன்பு, 1957ம் ஆண்டில் சேலம் நகரில் நடைபெற்ற தமிழரசுக் கழக மூன்றாவது மாநாட்டின் எம். ஏ. வி. பிக்சர்சாரால் எடுக்கப்பட்ட சினிமாப் படம் திரையிடப்பட்டது. நீண்ட நாட்களாகக் காணத் துடித்த இப்படத்தைக் கண்டு தமிழரசுக் கழக தோழர்கள் களிப்புற்றனர்.

வழக்கம்போல ஜனவரி 20ம் தேதி காலை தொடங்கிய மாநாடு, அதனையொட்டிய நாடகம் போன்ற நடந்த நாடகமும், மறுநாள் (21ம் தேதி) காலை 3 மணிக்குத்தான் முடிவுற்றது. அவை முடிந்து, படுத்து உறக்கம் வருவதற்குள் பொழுது விடிந்துவிட்டது. ஆனால் மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு இருந்த மகிழ்ச்சிவெறியிலே-கடமை உணர்ச்சியிலே உறக்கமில்லாத குறையால் உடல் கோளாறு இல்லை.

ஜனவரி 21ம் தேதி காலை பத்து மணிக்கு, தமிழினத்தின் தனிப்பெரும் கீர்த்தியாகத் திகழும் தமிழரசுக் கழக மாநாடு துவங்கியது. வரவேற்புக் குழுத் தலைவர் திரு. வே. கி. குப்புசாமி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். அதிலே வேலூர் நகருக்குரிய வரலாற்றுச் சிறப்புக்களை விரித்துரைத்து, பின்னர் தலைவர்களையும் பிரதிநிதிகளையும் அன்பு ததும்ப வரவேற்றார்.

கலைக்காவலர் எம். ஏ. வேணு அவர்கள் மாநாட்டைத் துவக்கி வைத்துப் பேசினார். எட்டுக் கிரகங்கள் ஒன்று சேரும் பரபரப்பான நிகழ்ச்சியை தற்கால அரசியலோடு பிணைத்துக் காட்டி அவை முழுவதையும் நகைச்சுவையில் ஆழ்த்தினார் வேணு. நவக்கிரகங்களிலே எட்டுக் கிரகங்கள் ஒன்று சேர மற்றொரு கிரகம் தனித்து நிற்கிறதல்லவா? அந்த ஒரு கிரகம் தமிழரசுக் கழகமே - என்றார். எட்டுக் கிரகங்கள், தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் என்று கூறி, அந்தக் கட்சிகளால் விளையும் கேடுகளிலிருந்து நாட்டைக் காக்க, தமிழரசுக் கழகம் தனித்து நிற்கிறது என்று அவர் கூறியபோது அவையிலெழுந்த ஆரவாரம் அடங்க நெடுநேரம் ஆனது.

பின்னர் வரவேற்புக் குழுத் தலைவர் வே. கி. குப்புசாமி மாநாட்டின் தலைமை பதவிக்கு திரு. ம. பொ. சி. அவர்களின் பெயரை பிரரேபித்தார். திருப்பத்தூர் தேவராஜ முதலியார் அதனை ஆமோதித்துப் பேசி, மிகப் பெரிய மாலையொன்றை வரவேற்புக்குழு சார்பில் மாநாட்டுத் தலைவருக்கு அணிவித்தனர். திருவாளர்கள் கு. ம. பாலசுப்பிரமணியம், வேலூர் கிருஷ்ணமூர்த்தி, குடந்தை எஸ். டி. பாலு ஆகியோர் தலைவர் பிரேரணையை ஆமோதித்துப் பேசினர். அதனையடுத்து மக்கள் செய்த உணர்ச்சிமிக்க ஆரவாரத்தினிடையே "ம. பொ. சி வாழ்க" என்ற வாழ்த்தொலி வானிலே ஒலிக்க ம. பொ. சி. ஒலி பெருக்கியின் முன்னே வந்து தலைமையுரை நிகழ்த்தலானர். ஆனால் பிரதிநிதிகளும், பார்வையாளர்களும் பலரும் அவரைப் பேச விடவில்லை. ஆம்; சுமார் அரைமணி நேரம் ஒரு வார்த்தை கூட பேசவிடாமல் அவரைத் தடுத்துவிட்டனர். காரணம், அன்புடன் பல மாலைகளும், சிலர் மாலைக்குப் பதில் ஆடைகள் அணிவித்தனர். இன்னுஞ்சிலர் ரூபாய்களை அன்பு காணிக்கையாகத் தந்தனர். இந்தக் காணிக்கைகளைச் செலுத்த மக்கள் "கியூ" வரிசையில் நின்ற காட்சி மறக்க முடியாததாகும். ஆண்களே யன்றி, இளம் பெண்களும் வயது முதிர்ந்த தாய்மாரும் மேடை மேல் ம. பொ. சி.க்கு மாலையணிவித்தனர்.

கியூ வரிசை நீண்டு கொண்டே போவதை அறிந்தார் ம. பொ. சி. அப்போது மணி பதினொன்றேகால். அதற்கு மேலும் தலைமை யுரையைத் தாமதப்படுத்த அவர் விரும்பாததால் கியூ வரிசையில் மேலும் சேர யாரும் அனுமதிக்க வேண்டாமென்று தொண்டர்படைத் தளபதிக்கு ஆணையிட்டார். அதனால் ஏமாற்றமடைந்த பலர், மாலை மாநாட்டில் தலைவர் முடிவுரையின் போது தம் காணிக்கைகளைச் செலுத்தினர். மாலைக்குப் பதிலாக ம. பொ. சி.க்கும், அவர் மூலம் தலைமைக் கழகக் கட்டிட நிதி, செங்கோல் நிதி ஆகியவற்றுக்கும் வழங்கிய தொகை சுமார் 500 ரூபாய்க்கு மேலிருக்கும். இப்படி ஒரு சிறப்பு வேறு மாநாடுகளில் நடந்ததாகச் செய்தி இல்லை.

முதுபெரும் கிழவியர் சிலர் ம.பொ.சி.க்கு மாலை அணிவித்தபோது, அவர்கள் மனங் குழைந்து அன்புரை கூறிய காட்சி அவையிலிருந்தோரை மயிர்க்கூச்செரியச் செய்தது.

சரியாக 12-15 மணிக்கு நாற்காலியில் அமர்ந்த வண்ணம் வரலாற்றுச் சிறப்புமிக்க தலைமை உரையை நிகழ்த்தினார் ம. பொ. சி. அவர் தமது பேச்சில் தமிழரசுக் கழகம் துவங்கிய காலத்தின் சூழ்நிலை, அக்காலில் அது துவங்கவேண்டியதன் அவசியத்தை, தோன்றிய காலத்தில் அதற்கேற்பட்ட எதிர்ப்புகளுக்கு ஈடு கொடுத்துக் கழகத்தைக் கட்டி வளர்த்த முயற்சியை விரிவாக விளக்கிக் கூறினார்.

அவையிலிருந்த மக்களும் சரி, மேடையிலிருந்த பிரமுகர்களும் சரி, பொதுத்தேர்தலைப் பற்றி ம. பொ. சி. என்ன சொல்லப் போகிறார் என்பதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தனர்.

ஆனால், முன்னுரையில் அது பற்றித் தலைவர் எதுவும் கூறவில்லை. முன்னுரையின் முடிவில் பொதுத் தேர்தல் பற்றி மாலையில் கூறுகிறேன் என்று குறிப்பிட்டு தமது பேச்சை முடித்தார். அதனுடன் இடைவேளைக்கு மாநாடு ஒத்திவைக்கப் பட்டது.

மூன்றும் நாள் காலை மாநாடு தொடங்குவதற்கு முன்னர், பாரி பந்தலுக்கு வெளியே கோவை திரு. சு. வேங்கடராமன் பி.ஏ., அவர்கள் [illegible] தேசியக்கொடியினை ஏற்றினார். [illegible]

தெற்கெல்லைப் போரில் உயிர் நீத்த தேவசகாயம், செல்லையா உள்ளிட்ட பலருடைய ஞாபகார்த்தமாக, [illegible]

(8-ம் பக்கம் பார்க்க)

கண்டேன் கண்டறியா...,

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கொடி உயர்த்தல்—தியாகிகள் படத்திறப்பு நிகழ்ச்சிகள் பந்தலுக்கு வெளியே நிகழ்ந்தன பின்பு மாநாட்டு மேடையில் நின்று, அவர்கள் இருவரும்-ஒவ்வொருவரும் தத்தமக்கென ஒரு பாணியிலே பேசக் கூடியவர்களாதலால் மாநாட்டின் துவக்கப் பேச்சு பிரதிநிதிகளுக்கும் பார்வையாளர்களுக்கும் நல்ல உணர்ச்சியை ஊட்டின.

மாலை 4 மணிக்கு மீண்டும் மாநாடு திரு. ம.பொ.சி. தலைமையில் கூடியது. சுமார் முப்பதுபேர் சொற்பொழிவாற்றினர். மூன்று மணி நேரத்தில் முப்பதுபேர் பேசினர்கள் என்றால், சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்ற முறையைக் கடைப்பிடித்தார்கள் என்று சொல்ல வேண்டியதில்லையல்லவா. கவிஞர் கு. சா. கிருஷ்ணமூர்த்தி, நீதிபரம் பா. சுப்பையன், மதுரை ரா. சுயம்வனந்தம் பி.ஏ., பி.எல்., ஆகிய மத்திய செயற்குழு உறுப்பினர்களும், சென்னை அரங்கநாதன், திருத்துறைப்பூண்டி கா. இராமச்சந்திரன், எழுத்தாளர் உசிலை ந. சோமநாதன், பழனி மாரிமுத்து எம். சி., கள்ளக்குறிச்சி ஜனார்த்தனன், கோவை சுவ்வதன், வண்ணை ஞானதரன், வேலூர் கிருஷ்ணமூர்த்தி, மதுரை மு. மாரியப்பன் பி.எஸ்.சி., பி.எல்., திருப்பூர் அங்கப்பன் பி.ஏ. பி.எல்., திண்டுக்கல் முத்துமாணிக்கம், சேலம் ஆ. சின்னையன், கன்னூர் தன்னரசு, ஸ்ரீ வைகுண்டம் காளிமுத்துப் பாண்டியன், பட்டுக்கோட்டை ராசகோபாலன், திருவனந்தை தாமரைச் செல்வன், சென்னை அருணாசலம் ஆகியோர் பேசினர். பெண்கள் சார்பில் திருமதி விசாலாட்சியுடையப்ப பேசினர்.

பம்பாயிலிருந்து வந்திருந்த அகில பம்பாய் தமிழ் சங்க செயற்குழு உறுப்பினரும் பம்பாய் கலாச்சாரக் கழக பொதுச் செயலாளருமான திரு. அரசு சு. இராமசாமி, மலேயா தமிழர் சார்பில் வந்திருந்த திரு. முனிசாமி ஆகியோரும் கடல் கடந்து வாழும் தமிழர்கள் சார்பாக மாநாட்டை வாழ்த்திப் பேசினர்.

செல்வி அ. பாமாசாம் பி.ஏ.பி.எல், குடந்தை சோ. பே. வையகம் ஆகியோர் பேச்சாளர் பட்டியலில் பெயர் கொடுத்திருந்தும் உடல நலமின்மையால் பேசமுடியவில்லை.

கடைசியாக மாநாட்டுத் தலைவர் ம.பொ.சி. ஜனவரி 19ல் கூடிய பிரதிநிதிகள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைப் படித்து முடித்ததும் மக்கள் கைதட்டி அங்கீகாரம் தெரிவித்தனர். [illegible]

[illegible]

(8-ம் பக்கம் பார்க்க)

ஆசிரியருக்கு

பழிப்பது ஏனோ?

பொதுத் தேர்தலில் தாங்கள் திரு. ஈ. வெ. கி. சம்பத் அவர்களுக்கு ஆதரவு காட்டுவதைக் குறித்து 'பாரதம்' என்னும் காங்கிரஸ் ஏடு அங்கலாய்த்துக் கொள்கிறது. "பிரிவினையை ஆதரிப்பதில்லை யென்று கூறும் ம. பொ. சி. பிரிவினைபோகும் உரிமையை வற்புறுத்தும் கட்சிக்கு ஆதரவு தரலாமா?" என்று கேட்கிறது.

நானும் கேட்கிறேன், 'பிரிவினையை முழு மூச்சாக எதிர்க்கும் காங்கிரஸ் கட்சி, உட்பகையாகத் தமிழகத்தைப் பிரித்துவிட கோரும் தி. க.வின் ஆதரவைப் பெறலாமா?

காலமெலாம் ராமராஜ்யம் கோரிய உயிர் விடும்போதும் 'ஹரே ராம்' என்று கூறிய காந்தியடிகளின் வாரிசுகள் 'இராமன் குடிகாரன்; சீதை விபசாரி' என்று கூறும் கட்சியின் ஆதரவைப் பெறலாமா?

உண்மையில், வேலூர் முடிவை 'பாரதம்' பாராட்டியிருக்க வேண்டும். ஏனோ, பழிக்கிறது.

சு. நடராஜமூர்த்தி
31-1-62 புதுக்கோட்டை

காந்தியின் குரல்!

வேலூர் மாநாட்டில் நிறைவேறிய தேர்தல் பற்றிய தீர்மானத்தை நாடு முழுவதும் வரவேற்கிறது. குறிப்பாக, காந்திய நெறியில் நம்பிக்கையுடையவர்கள் மனதில் தாங்கள் அறியாத இடம் பெற்றுவிட்டீர்கள். "எதிர்க்கட்சி வலுப்பெற வேண்டும்" என்ற கொள்கையை வலியுறுத்தி விட்டு, ஆனல் பிரிவினை கோருவோரையும், சோஷலிசத்தின் எதிரிகளையும் ஆசீர்வதிக்காதே என்று வேலூரில் தாங்கள் செய்த முழக்கம் காந்தியடிகளின் குரலாகவே என் காதுகளில் ஒலித்தது. தாங்கள் உண்மையான தேசபக்தர், 1-தர தேசியவாதி. தாங்கள் நூறாண்டுகள் வாழ்ந்து காந்தியத்திற்கு வழி வகுக்கப் பிரார்த்திக்கிறேன்.

மதுரை ப. சீனிவாசன்
30-1-62 (சர்வோதய தொண்டன்)

சமர்த்திவிட்டது. இதனிலும் சிறப்பாக அடுத்த மாநாட்டை நடத்துவது சுலபமல்ல.

மாநில மாநாடு எப்படி எல்லாம் நடக்குமென்று கற்பனை செய்து கொண்டு நான் வேலூர் போனேனோ அதைவிடப் பன்மடங்கு சிறப்பாக நடைபெற்று விட்டது. [illegible] வேலூர் மாநாட்டின் வெற்றிக்காக [illegible]

வாழ்க, தமிழரசுக் கழகம்!

கொங்கு நாட்டு வீரன் சின்னமலை

(இளங்கதிர்)

தமிழகத்தில் ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்து அவர்களால் தண்டிக்கப்பட்ட வீரர் திலகங்களில் முதல் முழக்கம் செய்த வீரபாண்டியக் கட்டபொம்மன் குறிப்பிடத்தக்கவர். அதை அடுத்து புலித்தேவனும் மருது சகோதரர்களும், கொங்கு நாட்டில் சின்னமலையும் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்களெல்லாம் சிறு சிறுப்புறப் ஆட்சி புரிந்த குறுநில மன்னர்களாவர்.

கி. பி. 1805ம் ஆண்டுதான், சின்னமலைக்கு உடனிருந்த இரு சகோதரர்களுக்கும் சங்ககிரிக் கோட்டை சிறைக் கோட்டையாக மாறி அவர்கள் வாழ்வின் இறுதியையும் அங்கேயே முடித்து வைத்தது.

சின்னமலையைப்பற்றி கொங்கு நாட்டில் வழங்கி வரும் 'சின்ன மலைக் கும்மி' குறிப்பிடத்தக்கது. மற்றும் புலவர் குழந்தை அவர்கள் எழுதியுள்ள சின்னமலை பாடத் துணை நூலும்தான் அவர்களின் வாழ்க்கைச் சரித்திரத்தை நாட்டுக்கு விளக்கி வருகின்றது.

கட்டபொம்மனைப் பற்றி பேச-எழுத பயந்ததுபோல், கொங்கு நாட்டில் சின்னமலையைப் பற்றி ஆங்கில ஆட்சி காலத்தில் பேசவும் எழுதவும் பயப்பட்டதால், சரியான வரலாற்று விளக்கங்கள் கிடைக்கவில்லை. கிடைத்த வரையில் உள்ளதைக் குறிப்பிட்டு, மறைந்து கிடக்கும் வீரச் செம்மல் சின்னமலையின் வாழ்வையும் தியாகத்தையும் நினைவு கூர்ந்து வீரர்களுக்கு விழா வெடுத்து, வரலாற்றையும் தமிழ்ப் பண்பையும் கலைச் செறிவையும் கண்போல் காத்துவரும் தமிழரசுக் கழகம், அதன் சீரிய தலைவர் செந்தமிழ்ச் செம்மல் சிவஞானம் அவர்களும் "தொட்டது துலங்கும்" என்பதற்கேற்ப, சின்னமலையின் நினைவு நாள் தவக்கவும் வழிகாட்ட வேண்டுகின்றேன்.

சுமார் ஆயிரத்து அறுநூறு ஆண்டுகளுக்கு முன்பு சோழ நாட்டை உத்தமக்காச் சோழன் என்பவன் ஆண்டு வந்தான். அப்போது பாண்டி நாட்டை சத்துரு சாதனன் என்பான் ஆண்டு வந்தான். சோழனுக்கும் பாண்டியனுக்கும் ஏற்பட்ட போரில் "கரியான் சர்க்கரை" என்னும் படைத்தலைவன் காட்டிய தீரத்தால் சோழன் படை தோல்வி கண்டோடியது. பாண்டியன் மனமகிழ்ந்து "உத்தமகாமிண்டன்" என்ற பட்டத்தையும் வழங்கி கொங்கு நாட்டுக் காரைபூருக்கு கரியான் சர்க்கரையை மன்னனாகவும் ஆக்கிப் பாராட்டினான். கரியான் சர்க்கரையின் வழிவந்தவர்கள் தான் கொங்கு இருபத்து நான்கு நாட்டு வேளாண்குடி மக்களும் அவர்களுக்குத் தலைமை பூண்ட (பட்டக்காரர்) சர்க்கரை மரபினர்களும்.

இரத்தினச் சர்க்கரை என்பவருக்கு 1756ம் ஆண்டில் தவமகவாக பிறந்தவர்தான் தீர்த்தகிரி என்ற சின்னமலை. இளமையிலே நல்ல தமிழ்ப்பற்றும் கல்வி கேள்விகளில் சிறந்தும் சின்ன மலை விளங்கினான். அதேபோல வீரப் பயிற்சிகளிலும் சிலம்பக்கலை (தடி வீச்சு முதலியன) பயின்று திறமிக்கவனாகப் புகழ் பட்டான். கொங்கு நாட்டில் கோவை, சேலம் கோட்டங்களும், திருச்சி, மதுரைக் கோட்டங்களின் வடபகுதியும் அடங்கியிருந்தது. காவிரி கொங்கு நாட்டின் இடையில் தெற்கு நோக்கிச் சென்றது. கொங்குநாடு அப்பொழுது மைசூர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. கொங்கு நாட்டின் அதிகாரி சங்ககிரிக் கோட்டையில் இருந்து வந்தார். கொங்குநாட்டு நிலவரிப் பணம் தண்டக்காரர்கள் மூலம் வசூலித்து வந்தனர். சின்னமலைக்கு அப்பொழுது வயது பதினெழு அல்லது பதினெட்டு இருக்கும். நம் நாட்டு வரிப்பணம் அயலவருக்குப் போவதா? பாடுபடுவது நாம்-பயன் பெறுவது அவர்களா?—என்று கொதித்தெழுந்து "சென்னிமலைக்கும் சிவன்மலைக்கும் நடுவில் உள்ள சின்னமலை வாங்கிக்கொண்டான் என்று சொல்" என்று கூறி தண்டக்காரர்கள் கொண்டு செல்லுவதைத் தடுத்து வாங்கிக் கொண்டான் சின்னமலை. இதிலிருந்துதான் சின்னமலையின் தேசப்பற்று துவங்கிப் பெயரில் மட்டுமல்ல, செயலிலும் சின்னமலையே பெரியமலையாக விளங்க வைக்கின்றது. 1792ல் கொங்கு நாட்டின் சரிபகுதியான சேலம் கோட்டம் ஆங்கிலேயர் வசமானதும் சின்னமலையின் வீரம் துள்ளிக் குதித்தது. தமிழ்களுக்கும் கலகத்தான். அயலார் கையிலிருந்து சேலம் அயலார்களிடம் கைக்குப் போய்விட்டது. இனி அடுத்துப் பேசாமலிருந்தால் கோவையும் போய்விடும். எனவே வருமுன் காக்கவேண்டும் என முனைந்து திப்புவின் படையில் கொங்குநாட்டு இளைஞர்களை ஏராளமாகச் சேர்த்துப் படை பலத்தைப் பெருக்கினன். கொங்கு நாட்டுப் படைக்குச் சின்னமலையே தலைவனாக்கப்பட்டான். மாலவல்லி என்னுமிடத்தில் நாற்பதாயிரத்துக்கு மேற்பட்ட ஆங்கிலப் படை வீரர்களைச் சிறை வைத்ததும், மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். திருவரங்கப்பட்டணத்துப் போரிலும் சின்னமலையின் வீரச்செயல்கள் புகழ் பெற்றது. 1799ல் திப்பு இறந்ததும் மைசூர்ப்படைசிதறிற்று. சின்னமலை கொங்கு மறவர்களுடன் தெற்கு நோக்கி வந்து சேர்ந்தான். கோவைக் கோட்டத்தில் ஊர்தோறும் ஆட்சி புரிந்துவந்த பாளையக் காரர்களை ஒருங்கு திரட்டி அவர்களுக்குத் தலைவனாகக் கோவைக் கோனானான். கரூப்பச் சேர்வைக்காரன்தான் சின்னமலையின் படைத் தலைவனாகத் திறமையுடன் பணி ஆற்றினான். "ஓடாநிலை"தான் கோவைக்கோட்டையின் தலைநகரமாக அமைந்தது. மலைப் பகுதிகளில் சிறந்த பழவகைகளைப் பயிரிட்டு விவசாயம் செய்து வேளாண் தொழிலுக்கு வழி காட்டியவன் சின்னமலை. நமக்குச் சிறந்த மலைப்பழ மத்தை (விருப்பாட்சி) உதவியவன் சின்ன மலையே ஆகும்.

தமிழ்ப் புலவர்கள்பால் மிகவும் ஈடுபாடு கொண்டவன் சின்னமலை. அவர்களைப் பொன் முழுக்காட்டிப் பெருமைப் படுத்துவான். புர்நதுறை அம்பிகாபதிப் புலவர் சின்னமலையைப் புகழ்ந்த பாடல்கள் வருமாறு:

"கங்கை யென்பார் நின் குலத்தைக்
கமலை யென்பார் ஆனூரைக்
கவின்சேர் நல்ல
மங்கை யென்பார் நினது தெய்வம்
மாதேவர் செயங்கொண்டார்
வாணர்க் கிறை
நின் கையென்பார், போர்க்காற்றுக்
கொரு வீரன் நின்னை யென்பார்
நிலத்தில் கீர்த்தித்
தங்கமென்பார், ரத்தினத்தின்
தீர்த்தகிரி யென்ற சோளும்
தருங் கண்டாயே!"

"சென்னிமலைக்குஞ் சிவன்மலைக்கும்
மிடை நீரமிகு
சின்னமலை யென்று மேனும்பு பேசிய
தீர்த்தகிரி
சொன்ன மலையினுல் யானைல்,
கீர்த்தியைச் சொன்னதற்கா
என்னை யடித்தது தூர்த்தனோ
ஏனியெனச் செய்வேனே!"

-இந்தத் தருணத்தில்தான் ஆங்கிலேயர் தூதுவர் சின்னமலையைக் காண வந்து கோவை கோட்டத்தை ஆட்சிபுரியவும் கப்பம் கட்டவும், ஆங்கிலேயர் படை தங்க வழி வகுக்கவும் ஆவன செய்ய விழைந்தனர். சின்னமலை அவர்களுக்கு ஆணித்தரமாகப் பதிலளித்து திருப்பி அனுப்பினான். உடனே வெள்ளையர்கள் கர்னல் மாக்ஸ்வெல் தலைமையில் படை அனுப்பினர். சின்னமலையின் குதிரைப் படைகளுக்கும் அவர்களுக்கும் முதற்போர் நடந்தது. வெள்ளைப் படை பெருந்தோல்வியுடன் பறந்தோடியது.

"பூனைக்குலமென வெள்ளைப் படை
யோடப்
பூரித்து வீரப்புலி போலச்
சேனைக் கதிபதி சின்னமலை வரும்
தீரத்தை வந்துமே பாருங்கடி"

—(சின்னமலைக் கும்மி)

இரண்டாம் போருக்கு பத்தாயிரம் பேர் கொண்ட வெள்ளைப் படை சென்னையிலிருந்து வந்தது. அப்பொழுது சின்னமலையின் படைகள் நாலாபுறமும் எல்லைக் காவலில் ஈடுபட்டிருந்தது. இருப்பினும் உடனடியாகத் தகவல் சென்றதால் அவர்களும் வந்து கலந்து இரண்டு நாள் போர் நடைபெற்றது. தடிக்காரர் வீச்சால் வெள்ளைப் படை பறந்தோடியது. சின்னமலையின் படையில் பெருஞ்சேதம் ஏற்பட்டது. மூன்றும் போராக 1803-4ல் மூவாயிரம் பேர் கொண்ட குதிரைப் படை கர்னல் ஹாரிஸ் தலைமையில் வந்தது. திருவரங்கப்பட்டணத்துப் போரில் குதிரைப் படையுடன் திப்புவை வென்றவன் ஹாரிஸ். தலைமறைந்த சின்னமலை குதிரையில் தாவினான். படைத்தலைவன் ஆகக் குதிரையைப் பாய்ந்து மார்பில் சுட்டான். அந்தக் குதிரை வல்லமையும் பெற்று வேகமாக ஓடியது. அதைப் பின் தொடர்ந்து மற்ற குதிரைகளும் அடங்காது சென்றது. சின்னமலையின் சமயோசித திறச்செயலால் அந்தப் போரும் தவிர்க்கப் பட்டது.

சின்னமலையின் ஆட்சியில் ஆறாவது ஆண்டு. முப்பத்தாறு பிரமுகர்கள் கொண்ட படையினரோடு வெள்ளையர்கள் கோட்டையிலிருந்து வரும் செய்தியை தன்பழைய தோழனும் சுபேதார் வேலப்பன் மூலம் சின்னமலைக்குத் தகவல் எட்டியது. உடனே சகோதரர்கள்-சேனைத் தலைவர்கள் சிறிது காலம் கருமலையில் தங்கி இருக்க முடிவு செய்தனர். அதன்படி உடனடியாக தெற்கெல்லைக்குச் சென்றனர். படையுடன் வந்த ஆங்கிலேயர், சுபேதார் வேலப்பன் தகவல் மூலம் அவர்கள் கருமலைக் சென்ற தறிந்து வேலப்பனைச் சுட்டுக் கொட்டையில் தொங்க விட்டனர். எப்படியாவது மீண்டும் சின்னமலை சகோதரர்களைப் பிடிக்க முயற்சி செய்து சூழ்ச்சித் திட்டம் வகுத்தனர். கருமலையில் சின்னமலை சமையற்காரன் உளவாளியானான். சின்னமலை சகோதரர்கள் உண்ணும்போது பிடிபட்டனர். 1805ம் ஆண்டில் சங்ககிரிக் கோட்டையில் விசாரணை நடைபெற்றது. அங்கும் அவர்களுக்கு அடங்கி இருக்க ஆங்கிலேயர் வற்புறுத்தினர். சின்னமலை சகோதரர்கள் வணங்காமுடிகளாகக் கம்பீரமாகப் பேசி ஆங்கிலேயர் அச்சமடையச் செய்தனர். அதன் விளைவு நீங்காத சிறைவாசத்தைத் தண்டனையாகப் பெற்றதாம்.

"கட்டுக் கடங்காத காளைகளைப் போலக்
கட்டிப் பிடித்துக் கயிறுடனே
வெட்டிச் செயங்கொண்ட
சின்னமலைதனை
வெள்ளைக்காரர் கொண்டு
போவதைப் பார்!"

(சின்னமலைக் கும்மி)

[10 ம் பக்கம் பார்க்க]

போர் ஒழிய, சுரண்டல் ஒழிய வேண்டும்

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

யுத்த உடன்பாடு என்ற பெயர்கள் எல்லாம் சுரண்டல் கொடுமையை மறைக்கும் திரைகள் போன்றவை.

ராட்சச யந்திரங்களை நான் வெறுத்துப் பேசும் போது, அவற்றின் தேவையை மறுத்தோ, மறைத்தோ பேசுவதாக எண்ணவேண்டாம். ஆனால், சுய தேவைக் காகவன்றி, தேவைக்கு அதிகமாக யந்திரங்களை உற்பத்தி செய்து பிற நாடுகள் மீது திணிப்பதையே நான் வெறுக்கின்றேன். யுத்தக் கருவிகளை விற்பதற்கென்றே பிற நாடுகளிடையே பகையை மூட்டும் வல்லரசுகளின் போக்கையே எதிர்க்கிறேன்.

இந்தக் கொடுமைகளிலிருந்து விடுதலை பெற உலகமெங்கும் பரவியுள்ள மேற்கத்திய பொருளாதாரத் தத்துவம் வழி காட்ட வில்லை.

இதிலிருந்து விமோசனம் பெறுவதற்கு புதியதொரு தத்துவம்- அதாவது, "கம்யூனிசம்" என்ற புதியதொரு சித்தாந்தம் பிறந்து அது வெற்றிப் பாதையில் முன்னேறியும் செல்கிறது. இதனைச் சிறிது நல்லெண்ணத்துடனேயே நோக்குவோம். இதிலுள்ள ஒரு பெரிய நன்மை உற்பத்திக் கருவிகளை தனிநபர்களிடமிருந்து பறித்து விடுவதன் மூலம் சமுதாயத்தில் அவர்களுடைய ஆதிக்கத்தை அடியோடு அழித்து விடுவதாகும். இதனை வரவேற்கலாம். ஆனால், இதிலுள்ள ஒரு பெருங்குறை ராட்சச ரீதியான இயந்திரப் படைப்புகளை - முதலாளித்துவ வல்லரசுகளோடு போட்டி போட்டுக்கொண்டு-அதிகரித்து வருவதாகும். இச்செயல் முதலாளித்துவ நாடுகளின் போக்கை எதிர்ப்பதாக வன்றி, ஒரு வகையில் அவற்றைப் பின்பற்றுவதாகவே ஆகிறது. தீமைக்குத் தீமை பரிகாரமாகா தென்பதை மனதில் கொள்ள வேண்டும்.

இது ஒருபுறமிருக்க, புதிதாகத் தோன்றியுள்ள கம்யூனிஸப் பொருளாதாரம் 'மக்கள் ஆட்சி' என்ற பெயரால், சர்வ சக்தியுள்ள எதன்மீதும் எப்போதும் அதிகாரம் செலுத்துகின்ற ஒரு ஆட்சியைத் தோற்றுவிக்கின்றது. அதனல், சாதாரணக் குடிமக்களின் வாழ்க்கைத்தரம் மேம்படுகிற தென்றாலும், விரும்பியோ-விரும்பாமலோ பலாத்காரத்தோடு பிரிக்க முடியாத படி கம்யூனிஸம் பிணைந்து கிடக்கின்றது.

இந்த இடத்தில்தான் மார்க்ஸியப் பொருளாதாரத்திடமிருந்து காந்தியப் பொருளாதாரம் திட்டவட்டமாக வேறுபடுகின்றது. ஆம்; சுரண்டலைத் தோற்றுவித்து அதனை நிரந்தரமாக்கப் பார்க்கின்றது, மேற்கத்திய வல்லரசுகளின் பொருளாதாரம். அந்தச் சுரண்டலிலிருந்து விடுவிக்கத் தோன்றிய மார்க்ஸியப் பொருளாதாரமோ, பலாத்கார ரீதியான ஸ்தாபன ஏதேச் சாதிகாரத்திற்கு சமுதாயத்தை இரையாக்குகிறது. இந்த இரண்டு தீமைகளிலிருந்தும் மனித குலத்தைக் காப்பாற்ற முயல்கிறது காந்தியப் பொருளாதாரம்.

நவீன நாகரீகம், எந்த ஒரு தொழிலிலும் உழைப்பு வேறு; அந்த உழைப்பைப் பயன்படுத்தும் அறிவு வேறு எனப் பிரிவினை செய்து விட்டது. என்ஜினீயரிங் தொழிலின் நுணுக்கம் தெரிந்த நிபுணருக்கு அந்தத் தொழிலிலே கையைப் பயன் படுத்திப் பழக்கமில்லை. கையைப் பயன்படுத்தி பழக்கப்பட்ட தொழிலாளிக்கு அந்தத் தொழிலைப் பற்றிய நுணுக்கங்களில் பொது அறிவு கூட இருக்க வாய்ப்பில்லை.

இது மேற்கத்தியப் பொருளாதார அமைப்பில் அமைந்த கல்வித் திட்டத்தின் கோளாறு.

காந்தியப் பொருளாதாரப்படி அமைந்த கல்வித் திட்டத்தில் உடலுழைப்போடு கூடிய தொழிற் கல்வி ஆரம்பப் பள்ளியிலேயே இடம் பெறுகின்றது. வார்தா கல்வித் திட்டம் அல்லது ஆதாரக் கல்வித் திட்டம் என்பவை, காந்தியப் பொருளாதாரத்தின் அம்சங்களே.

கொஞ்சம் படித்து விட்டால், அதனோடு செல்வமும் சேர்ந்து விட்டால், வீதியில் நடந்து செல்வதோ கையில் ஏதேனும் ஒரு பொருளை எடுத்துச் செல்வதோ தம்முடைய அந்தஸ்துக்கு இழுக்கு என்ற அறியாமை மக்களிடையே வளர்ந்து வரக்காண்கிறோம்.

இது நமது சொந்த நாகரீகத்திலுள்ள குறையன்று. நம்மீது ஆதிக்கம் செலுத்தும் அன்னிய நாகரீகத்தின் விளைவாகும்.

காந்தியப் பொருளாதாரம் எல்லாத் துறைகளிலும் விதேசியத்திலிருந்து நமக்கு விடுதலை தேடத் தோன்றிய சுதேசியத் திட்டமாகும்.

மிலப்பிரபுத்துவமும் நவீன யந்திரங்கள் தோற்றுவித்த தொழில் முதலாளித்துவமும் தமக்கென தனித்த நாகரீகத்தை தனியான கலைகளை-காப்பியங்களைச் சிருஷ்டித்துக் கொண்டு விட்டன. இந்தச் சிருஷ்டிக்கு அப்பால் கோடான கோடி மக்கள் இருக்கிறார்கள் என்பதனை நிலப்பிரபுத்துவ, தொழில் முதலாளித்துவக் கூட்டங்கள் உணருவதில்லை.

காந்தியம் எந்த ஒன்றிலும், சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள மக்கள் நலனையே உறைகல்லாக வைத்துப் பார்க்கின்றது.

"சுயராஜ்யம்" என்பதற்கு, 'கிராம ராஜ்யம்' எனப் பொருள் கூறுகின்றது.

"அரசாங்கம்" என்னும் போது, அதிகாரங்கள் அனைத்தும் அதனிடமே குவிந்திருக்கக் கூடாது என்று எச்சரிக்கின்றது.

'தொழில் வளர்ச்சி' எனும் போது, ஏதோ ஒன்றிரண்டு மாவிலங்களிலோ அல்லது ஒன்றிரண்டு நகரங்களிலோ தொழில்களைக் குவிப்பதால் ஏற்படக்கூடிய கேடுகளையும் எடுத்துக் காட்டி எச்சரிக்கின்றது.

நாடு முழுவதும் தொழில்கள் பரவலாக அமைய வேண்டும் என்றும், அவற்றில் கிடைக்கும் வருவாய் எல்லா மக்களுக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென்றும் கூறுகின்றது.

'கல்வி' என்னும் போது, எல்லாக் கட்டங்களிலும் தாய் மொழியில் கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்பதோடு, எல்லோரும் இலவசமாகவும், எளிதாகவும் கற்றுக் கொள்ளக் கூடியவாறும் பாடத் திட்டங்கள் அமைய வேண்டு மென்கிறது.

நிலப் பிரபுத்துவமும், தொழில் முதலாளித்துவமும், வர்த்தக முதலாளித்துவமும் மனிதசமுதாயத்தில் ஏற்படுத்தியுள்ள தீமைகளுக்கு ஒரே பரிகாரம் காந்தியப் பொருளாதாரமே.

ஆனால், ஒரு விஷயத்தை இங்கு மறைக்காமல் சொல்ல விரும்புகிறேன். காந்தியப் பொருளாதாரம் எவ்வளவு தான் சிறந்ததாயினும், அதனை நடைமுறைக்குக் கொண்டு வந்து அதன் நல்ல பலன்களை உலக நாடுகளுக்கு உணர்த்த வேண்டிய பொறுப்பு சுதந்திர பாரதத்தின் மீதே சுமத்திருக்கின்றது.

மக்கள் மன்றங்களிலே அங்கம் வகிக்கும் எம்.எல்.ஏ.க்களை மாநிலம் தோறும் தனித்தனியே கூட்டி, விசேஷ வகுப்புகள் போல வைத்து, அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட நாளுக்குப் படிப்பணம் தரப்படும் என்றும் உறுதிகூறி, அவர்களுக்குக் காந்தியப் பொருளாதாரம் போதிக்க வேண்டும்.

கல்லூரி தோறும் மாணவர்களைக் கூட்டிவைத்து, காந்தியப் பொருளாதார வகுப்பு நடத்த வேண்டும்.

இவ்வளவையும் செய்வதற்குப் பொறுப்பேற்க வேண்டிய ஆட்சிக்கு, அதன் இலாகாக்களின் அதிகாரிகளுக்குக் காந்தியப் பொருளாதாரத்தில் அழுத்தமான நம்பிக்கை இருக்க வேண்டும்.

மதுவிலக்கு இலாகாவின் அதிகாரிக்கு மது உண்ணும் பழக்கம் இருக்கக்கூடாதது போல, கல்வி இலாகா அதிகாரியின் பிள்ளை கான்வென்ட் பள்ளிக்குப் போகக்கூடாது என்பது போல, அரசாங்க சார்பில் ஐந்தாண்டுத் திட்டங்களைத் தயாரிக்கும் தேசியத் திட்டக் கமிஷனுக்கு காந்தியப் பொருளாதாரத்தில் அவநம்பிக்கை இருக்கக் கூடாது.

ஆனால், இன்றைய நிலைமை எனக்கு நம்பிக்கை ஊட்டுவதாக இல்லை. ஆதாரக் கல்வித் திட்டத்தில் பூரண நம்பிக்கை கொள்ளாத நிலையிலேயே, அது வெறும் சடங்காக எங்கோ சில இடங்களில் அமுல் நடத்தப்படுகிறது. பயிற்சி மொழி, ஆட்சி மொழி, நீதி மன்ற நிர்வாக மொழி தமிழாகத்தான் இருக்க வேண்டும் என்ற பிரச்னையிலும் நம்பிக்கை வேறு, நடைமுறை வேறு என்ற நிலைதான்.

ஆம்; தவறான பாதையில் நமது சமுதாயம் நெடுந்தூரம் 'முன்னேறி' விட்டது. தவறான பாதையில் வந்துவிட்டோம் என்பதை உணர்ந்து விட்டதுஎன்றும், அதிலிருந்து பின்வாங்கத் துணிவு வரவில்லை. ஒவ்வொரு துறையிலும் இதே நிலைதான்.

நான் நம்பிக்கை இழக்கவில்லை. இருளில் கிடந்து தடவுகின்றேன் என்பது உண்மையாயினும், மக்கள் விழிப்புப்பெற்று விட்டால் இருள் விலகிவிடு மென்ற நம்பிக்கை எனக்குண்டு. மக்களிடையே விழிப்பை உண்டாக்க இது போன்ற விழாக்களும், கண்காட்சிகளும் தேவை. காந்தி ஞாபகார்த்த நிதியினருடைய முயற்சி வெற்றி பெற வாழ்த்துகிறேன்.

●

[9ம் பக்கத் தொடர்ச்சி]

கை கால்களுக்கு விலங்கிட்டுக் கொண்டு நாடே கதறி அழ, கோவைக் கோட்டமே கண் கலங்க வெள்ளையர் அவர்களுக்கு என்னற்ற கொடுமைகள் விளைவித்தனர். இறுதியில் சிறையிலேயே அவர்கள் வாழ்வும் முடிவுற்றது. கொங்குநாட்டு வீரர் திலகமான சின்னமலையும் அவர்கள் சகோதரர்களும் நாட்டுப் பற்றுல் நல்ல வாழ்விழந்து நலிந்து வாட்டும் கொடுமையில் வதிந்து, பெற்ற தமிழ்மண்ணின் புகழ் செழிக்க தங்கள் இன்னுயிர்களை அர்ப்பணித்ததை எண்ணுங்கள்-மறவாமல் போற்றுங்கள்.

வாழ்க, சின்னமலை நினைவு.

ராஜ்ய கீதம், தேசிய...

(முதல் பக்கத் தொடர்ச்சி)

புதிதாகச் சிருஷ்டிப்பது முரணாகும் என்பது என் கருத்து. தேசிய கொடியும், தேசிய கீதமும் சர்வதேச அரங்கிலும் இடம் பெறுவதாகும். இதற்கிடையில் ராஜ்ய கீதம் என்ற ஒன்றைப் புகுத்தலாமா என்பது சிந்தனைக்குரிய கேள்வி. ராஜ்ய அரசாங்க முத்திரையைப் போல ராஜ்ய கீதம் என்று ஒன்று இருக்கலாமா? சிந்திக்க வேண்டுகிறேன்.

"வாழிய செந்தமிழ்" என்ற கீதத்தை எல்லோரும் பாட வேண்டும். ஆனால் அதற்கு புதிதாக "ராஜ்ய கீதம்" என்ற தனி அந்தஸ்தைக் கொடுக்கத் தேவை யில்லை என்பது என் பணிவான கருத்தாகும்" என.

"வியஸ்ஸார்" என்ற புனைப்பெயர் தாங்கியவர் எழுதியிருக்கிறார்.

இந்திய தேசிய கீதத்துக்கு மாற்றாகவோ, அதற்குப் போட்டியாகவோ ராஜ்ய கீதம் வேண்டுமென்று கோரவில்லை வேலூர் மாநாடு.

மற்ற, அகிலஇந்திய ஒற்றுமையை மறந்து வேங்கடத்திற்கு வெளியீடும் வெறியுணர்ச்சியில் கோரப்பட்டதுமன்று. இந்தியாவிலுள்ள ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் தேசிய கீதத்தின் மதிப்புக்குக் குறைவு நேராத வண்ணம் ராஜ்ய கீதமும் இருக்க வேண்டுமென்றுதான் வேலூர் மாநாடு கோரியிருக்கிறது.

'தமிழ் நாடு', 'பாரத நாடு' ஒருங்கே வாழிய, என்று இந்திய தேசிய கீதம் வாழ்த்துவதாக கட்டுரையில் கூறுகிறார். இது வலிந்து கூறுவதாகும். இந்திய தேசிய கீதத்தில் திராவிட நாடு கூட்டுக்கொள்கை மறைத்து வைக்கப்பட்டிருக்கிறது. இதனை கட்டுரையாளர் மறந்தார் போலும்.

ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் ராஜ்ய கீதம்ருப்பது தவறு என்றால், இந்திய மாநிலங்களில் ஒன்றாக விளங்கும் காஷ்மீர் ராஜ்யத்திற்கு மட்டும் தனி ராஜ்ய கீதம் அனுமதிக்கப்பட்டிருப்பானேன். இதனையும் எதிர்த்து எழுதி, அதனை ரத்துசெய்யுமாறு கட்டுரையாளர் கேட்பாரா?

ராஜ்யத்திற்கொரு கீதமிருப்பது தேசிய ஐக்கியத்தைக் குலைக்குமென்றால் காஷ்மீர் ராஜ்யத்திற்கு மட்டும் அந்த விசேஷ அந்தஸ்தை வழங்குவானேன். ஒருக்கால் தருணம் வாய்க்கும்போது அது பறிக்கப் [illegible]

அமெரிக்கக் குடியரசு ஒரே மொழி வழங்கும் நாடாக ஒரே நிறத்தினர், ஒரே மதத்தினர் பல்வேறு ராஜ்யங்களாகப் பிரிந்து, அதே நேரத்தில் விருப்பத்தின்பேரில் இணைந்துவாழும் கூட்டுக் குடியரசாக விளங்கி வருகின்றது. அந்த மட்டில் ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் தனித் தனியே ராஜ்ய கீதம் இருக்கிறது. அதனால் அதன் தேசிய ஒற்றுமை இறந்ததாகத் தெரியவில்லை.

பல்வேறு மொழி பேசும் வெவ்வேறு இனத்தவர் வாழும் இந்தியாவில் மொழிவாரி அரசுகள் அமைந்துள்ள இந்திய யூனியனில் ராஜ்யத்திற்கொரு கீதமிருப்பதைத் தவிர்க்க முடியாது அமெரிக்கக்குடியரசினும் இங்கு அது அவசியமாகும்.

"வாழிய செந்தமிழ்" என்ற பாடல் எல்லாப் பள்ளிகளிலும் எல்லாத் தமிழரும் பாடவேண்டிய பாடல் தான்" என்று கூறும் கிராம ராஜ்யக் கட்டுரையாளர் அதற்கு ராஜ்ய கீதம் என்ற அந்தஸ்தை அளிக்கக் கூடாதென்கிறார்.

ஏதோ பள்ளிக்கூடங்களிலேனும் பாடலாம் என்று அனுமதித்ததற்காக அவரைப் பாராட்டலாம்.

ஆனால், வேறு எவருடைய அனுமதியும் இன்றி பாரதி பாடல்கள் தமிழகத்தில் உயிர் வாழும், ஓங்கி வளரும். ஏனே தமிழ் நாட்டிலுள்ள தேசிய வாதிகளிடையே மட்டும் சரியாக உணர்ந்தோ உணராமலோ, தாய்மொழிப்பற்றிலிருந்துவிலகி நிற்பதுதான் தேசிய உணர்ச்சிக்குப் பெருமை தருவதாகும் என்று கருதுகின்றனர். இது தேசிய விரோதிகளுக்குத் தாய்மொழிப்பற்றை ஏகபோகமாக்கி விடுவதாகும்.

அன்றொரு நாள் திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் 'தமிழால் முடியுமா' என்ற நூல் வெளியீட்டு விழாவில் ஏதேதோ பேசினர். அது தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு எதிராக இந்தி மொழி ஆதிக்க சக்திக்கு ஆசி கூறியது போல நாளிதழ்களில் வெளியாகியிருந்தது. வெளியிட்டது காங்கிரஸ் ஏடுகளே! அந்தப் பேச்சைக் குறித்து கடந்த வார 'செங்கோல்' இதழில் நமது வெறுப்பை வெளிப்படுத்தியிருந்தோம்.

அது, நண்பரொருவரால் டி. டி. கே. யின் பார்வைக்கு அனுப்பப்பட்டு 7-2-62ல் மாணவர் காங்கிரஸ் சார்பில் சென்னையில் நடைபெற்ற முத்தமிழ் விழாவில் தமது நிலைமையை விளக்கியிருக்கிறார் டி. டி. கே.

கல்வி அமைச்சர் தமிழ்மொழி வளர்ச்சிக்காக நிறை வேற்றி வரும் திட்டங்களைத் தாம் ஆதரிப்பதாக அவர் தெளிவு படுத்தவு மில்லை.

அது எப்படி இருப்பினும், "நான் தமிழுக்கு விரோதியோ, துரோகியோ அல்ல" என்று அவர் கூறியதற்காக ஆறுதலடைகிறோம்.

பொதுவாக தமிழ் நாட்டுத் தேசிய வாதிகள் தங்களுடைய போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும். காந்திய நெறியைப் பின்பற்றும் கிராமராஜ்ய ஏடு கூட தாய் மொழிப் பற்றுக்கு விலகாகச் செல்வது நமக்கு வியப்பைத் தருகிறது.

இந்த நிலை நீடிக்குமானல், தாய் மொழிப்பற்று பிறமொழிப் பகையாக மாறிவிடக்கூடிய அபாயமிருக்கிறது. இதனைத் தேசியவாதிகள் உணர வேண்டும்.

கதர் காட்சியில் ஆங்கிலப் பேச்சா?

அவைத் தலைவர் திரு. செகநாதன் அவர்கள் ஆங்கிலத்தில் முன்னுரை நிகழ்த்தினர். இங்கு கூடியுள்ளோர் தமிழர், அவைத் தலைவரும் தமிழர். ஆகவே, அவர் தம் தாய் மொழியிலேயே பேசியிருக்கலாம். ஏனே ஆங்கிலத்தில் பேசினர்.

காந்தியடிகள் தோற்றுவித்த சுதேசி இயக்கம், ஆடையில் மட்டுமல்லாமல், அனைத்திலுமே சுதேசியத்தை விரும்புவதாகும். சொந்த மொழியிருக்க, அன்னிய மொழியில் பேசுவது சுதேசிய மாகுமா?

அண்ணல் காந்தியடிகள் முன்னொரு சமயம் காரைக்குடி வந்திருந்தபோது, அவருக்களித்த வரவேற்பிதழில் "சுதேசியத்தை உளமார ஆதரிப்போம்" என உறுதி கூறப்பட்டிருந்தது. அதைக் கண்ட அடிகள், உங்கள் சொந்த மொழியிருக்க அன்னிய மொழியில் வரவேற்புத் தந்தது சுதேசி உணர்ச்சியன்று. என்னை ஏமாற்றுகிறீர்கள். தாய்மொழியைப் பேணுவதும் சுதேசியத்தின் ஒரு அம்சமாகும்" என்று கூறினர்.

காந்தியப் பொருளாதாரத்தில் சுதேசியத்திற்கு - அதன் கண்கண்ட சின்னமான கதருக்கு சிறப்பிடம் இருப்பதை விளக்கவே இன்று இந்த விழா நடக்கிறது. இதிலேயும் ஆங்கிலத்தில் பேசுவது முறையாகுமா? இந்தக் குறை நம்மிடமிருந்து அகல வேண்டும்.

(5-2-62 காலை சென்னை மாநிலக் கல்லூரியில் நடைபெற்ற

சுய ஆட்சி

"காண்டீபன்"

—•—

தாவிலம் வியந்திட மாநாடு-தனை
நல்லோர் புகழ்ந்திட நடத்திவிட்டோம்
மாநில சுயாட்சி காண்பதற்கே இனி
மயங்குதல் வேண்டாம் புறப்படுவீர்

சேரனும் சோழனும் மௌரியனும்-முன்
செய்திடாதொரு பேரரசேதனும்
பாரதம் ஒன்றெனக் கண்டதில்லை-அவர்
பண்பாடென்றும் இணைந்ததில்லை

காகமும் குயிலும் ஒன்றாமோ-வீண்
காலங் கழிப்பது நன்றாமோ?
ஏக இந்தியா வீண் பேச்சு-இனி
எழுவோம் 'சுயாட்சி' நம் மூச்சு

உரிமைகள் நமக்கே வேண்டுமடா-எனில்
ஓயாதுழைப்பும் வேண்டுமடா
சிறுமைகள் பெற்றே வாழ்வதுவோ-நம்
செந்தமிழ் வீரம் மடிவதுவோ?

உரிமைக் கெல்லை வேங்கடமாய்,
உறவுக் கெல்லை இமயமென,
உரிமைத் தமிழர சேற்றிடுவோம்
உலகினில் உயர்வே பெற்றிடுவோம்

மொழி வழி பிரிதல் பிரிவினையோ-முன்
மொழிந்ததைச் செய்தல் சிறுவினையோ
பிழையினில் இல்லை காந்தியவர்-முன்
பேசிய கருத்தீது பின் தொடர்வீர்!

திருத்தணி கொண்டோம் வெற்றியுடன்-இனி
திருவேங்கடமும் தமதாகும்
கருத்துடன் நேற்றை மீட்டதெல்லாம்-நம்
கழகம் பெற்ற நல் மாலைகளாம்

அன்பும் அறமும் தந்த வழி,
அண்ணல் காந்தி தந்த வழி
இன்பத் தமிழகம் கண்டிடுவோம்